# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை (25.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :149


## சரசாலை, வேம்பிராயில் நேற்றிரவு பதற்றம்

### பயணிகள் சென்ற மினிபஸ்ஸூம் தடுத்துவைப்பு

சரசாலை,ஏப்.25

தென்மராட்சிப் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களால் சரசாலை, வேம்பிராய், மட்டுவில் பகுதிகளில் நேற்றிரவு பதற்றமான சூழ்நிலை காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

புத்தூர் - வேம்பிராய் வீதியில் சரசாலை ஏற்றத்தடிப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் தொடர் வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்றும்-

இதில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழக்கவும், மற்றொருவர் காயமடையவும் நேரிட்டது என்றும் - உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன. இணையத்தளங்களிலும் இது குறித்து தகவல்கள் வெளியாகியிருந்தன. (14ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஏப்.25

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முன்னாள் உபதலைவரான 74 வயது முதியவர் நேற்றுமுன்தினம் மாலை தம்பாட்டிக் கடற்கரையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தம்பாட்டியைச் சேர்ந்த நாகமுத்து திருச்செல்வம் என்பவரே கொல்லப்பட்டார். இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஹெலிவசதி பற்றிய அரசின் முடிவு

# புலிகளுக்கு இன்னும் கிட்டவில்லை

## உத்தியோகபூர்வ அறிவித்தல் இது வரை கிடைக்காததால் இழுபறி தொடருகின்றது

கிளிநொச்சி, ஏப்ரல் 25

**விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து செல்வதற்குப் பத்துப் பேர் பயணிக்கக் கூடிய தனியார் ஹெலிகொப்டர் வசதி வழங்குவதற்கு இலங்கை அரசுத் தரப்பில் எடுக்கப்பட்ட முடிவு இன்னும் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**அரசின் முடிவு பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல் கிடைத்த பின்னரே அவ்விடயம் பற்றி புலிகள் தீர்மானம் ஒன்றை எடுப்பர் என்றும் கிளிநொச்சி வட்டாரங்கள் குறிப்பிட்டன.**

கிழக்கிலுள்ள தமது தளபதிகள் வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசிய பின்னரே அடுத்த சுற்று அமைதிப்பேச்சில் பங்கு பற்றுவது குறித்துத் தீர்மானிக்கப்படும் என விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்த நிலையில் -

புலிகளின் தளபதிகளின் போக்குவரத்து ஏற்பாடு பற்றிய விவகாரத்தில் இழுபறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா துட்டுவெவவில் ஊர்காவலர்கள் இருவர் பலி

வவுனியா, ஏப்.25

வவுனியா துட்டுவெவ பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு ஊர்காவலர்கள் கொல்லப்பட்டனர்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர்கள் வெள்ளை வானொன்றை சோதனையிட முற்பட்டபோது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-க-164)

**நாளைய கல்விச்சுடரில்**

**இரசாயனவியல் வினாத்தாளும் விடைக் குறிப்புகளும் வெளிவரும்.**

## ஓட்டோ சாரதிகள் சேவை புறக்கணிப்பு

வலி.வடக்கு,ஏப்.25

யாழ். குடாநாட்டில் ஓட்டோ சாரதிகள் தொடர்ச்சியாக இனம் தெரியாதவர்களினால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து ஓட்டோ சாரதிகள் நேற்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டார்கள்.

இதன் காரணமாக நேற்றைய தினம் யாழ்ப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மரவன்குளத்தில் ஒருவர் சூட்டுக்குப் பலி

வவுனியா, மரவன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை வெள்ளைவானில் வந்தவர்களினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வவுனியா பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இராசநாயகம் ஜெகன் (வயது - 25) என்பவரே உயிரிழந்தவராவார். உயிரிழந்தவர் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரென்றும், வெள்ளை வானில் வந்த மூவர் இத்துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு சென்றுள்ளனர் என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (எ-13)

## இன வன்முறையைத் தூண்டாத வகையில் செய்திகளை வெளியிட ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, ஏப். 25

" இனக்கலவரங்கள், இன வன்செயல்களைத் தூண்டும் விதத்தில் செய்திகள் வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்."

- இவ்வாறு தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், ஊடகப் பொறுப்பாளர்களையும் நேற்று 'அன்புரிமையுடன்' கேட்டுக் கொண்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பத்திரிகை ஆசிரியர்களையும், ஊடகப் பொறுப்பாளர்களையும் நேற்று மாலை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களோடு உரையாடிய சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உண்மைத் தகவல்கள், செய்திகளை வெளியிட வேண்டாம் என்று நான் கோரவில்லை. அச்செய்திகள், தகவல்கள் இனக்கலவரங்கள், வன்செயல்கள் போன்றவற்றைத் தூண்டுவனவாக - தூபமிடுவனவாக - அமையாமல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்', 'சுடர் ஒளி'யில்தான் அதிக பொறுப்பு தங்கியுள்ளது

### ஆசிரியரிடம் ஜனாதிபதி நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

"அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் அதிக பொறுப்பு 'உதயன்', 'சுடர் ஒளி'க்குத்தான் உள்ளது. உங்கள் பத்திரிகைகளைத் தான் அவர்கள் (புலிகள்) வாசிக்கின்றார்கள். ஆகவே, உங்கள் கைகளில்அதிக பணி தங்கியுள்ளது."

- இப்படி 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரிடம் கூறினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுமாலை அலரிமாளிகையில் பத்திரிகை (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது சர்வதேச அழுத்தம் பிரயோகிக்க கோருகிறது அரசு

கொழும்பு, ஏப்.25

திருகோணமலை, கோமரசன்கடவலவில் ஆறு சிங்களவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டிருக்கும் அரசு, புலிகளின் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம், இணைத்தலைமை நாடுகள் உட்பட்ட சர்வதேச சமூகம் முழுமையான அழுத்தத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்புக்கு இந்திய அரசு ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

### பேச்சை ஆரம்பிக்க வலியுறுத்துகிறது அதன் வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஏப். 25

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சமீபகாலமாகத் தலைதூக்கியுள்ள வன்செயல் சம்பவங்களின் பெருக்கம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது இந்திய அரசு.

இவ்விடயம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தகராறில் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும், கூடிய விரைவாக பேச்சை ஆரம்பிப்பதற்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

### இனப் பதற்றம் நீடிக்கிறது

## மூதூர், கிளிவெட்டிப் பிரதேசங்களில் தமிழர்கள் பெருமளவில் இடம்பெயர்வு

மூதூர், ஏப். 25

கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து மூதூரில் ஏற்பட்ட இனப் பதற்ற நிலைமை தொடர்ந்து நீடிப்பதால் மூதூர், கிளிவெட்டி ஆகிய பிரதேசங்களிலிருந்து பெருவாரியான தமிழ் மக்கள் இடம்பெயர ஆரம்பித்திருக்கின்றனர்.

மூதூர், குமாரபுரம், தங்கநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், கிளிவெட்டி மகா

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் நிலைவரம் குறித்து ஆயர் இல்லச் சந்திப்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ். குடாநாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை தொடர்பாக படைத்தரப்பினருக்கும் சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவின் தலைவர் டி.ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தூதுக்குழுவின் செயலாளர் க.பத்மநாதன், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வண. ஈ. செல்வராசா அடிகளார், வண. ஏ.று.பேர்னாட், வண.ஜேக்கப் நிக்கலஸ், பி.ஏ.அருமையாகம், தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த வண. எஸ்.ஏ.ஆனல்ட், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, எஸ்.சிவபாலன் ஆகியோரும் -

படையினர் தரப்பில் யாழ். பிரதம சிவில் நிர்வாக அதிகாரி கேணல் எம்.எஸ். பெரேரா, யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை:-

பொதுமக்கள் கண்டபடி கொலை செய்யப்படுகின்றனர். அத்துடன், குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறும் இரவுநேரத் திருட்டு, கொள்ளை என்பவற்றினால் மக்கள் ஒருவகையான பீதியுடன் பொழுதைக் கழித்து வருகின்றனர். அத்துடன், அவர்கள் ஒருவகையான பீதியுடன் நடமாடுவதையும் அவதானிக்கமுடிகின்றது.

திருட்டு, கொள்ளைகளில் ஈடுபடுபவர்களை இராணுவத்தினராலோ அல்லது பொலீஸாராலோ ஏன் கைதுசெய்துகொள்ள முடியவில்லை என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். சட்டம், ஒழுங்கைப் பேணுவது படைத்தரப்பின் பொறுப்பு. இந்தக் கடமையிலிருந்து படையினர் பின்வாங்கக் கூடாது - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில்:-

படையினர் திடீரென அமைத்த வேகத் தடைகளால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக வாகன சாரதிகளும், நோயாளர்களும் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் அவசர தேவைகளுக்குக்கூட இரவுவேளைகளில் நடமாட அஞ்சுகின்றனர் - என்றார்.

போராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தமதுரையில்:-

குடாநாட்டில் கடற்றொழிலுக்கு விதிக்கப்படும் நேரக்கட்டுப்பாடு காரணமாக, கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். படையினர் கடற்றொழிலுக்கு அனுமதிக்கும் நேரத்தில் தொழில் செய்யமுடியாத நிலையும் ஏற்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரில் உள்ள பிரதான வீதிகளுள் ஒன்றான மின்சாரநிலைய வீதியை பொதுமக்களின் போக்குவரத்துக்கு திறந்துவிட வேண்டும். இதனால் நகரில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைச் சீர்செய்துகொள்ள முடியும். குறிப்பிட்ட வீதியை நாள் முழுவதும் மக்கள் பாவனைக்குத் திறந்து விடமுடியாது விட்டால், பகல்வேளைகளிலேனும் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்துடன், மின்சார நிலைய வீதியில் உள்ள பொது மலசலகூடத்தை பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். இதற்கு வசதியாக, அப்பகுதியில் உள்ள படைநிலை பின் நகர்த்தப்படவேண்டும் - என்றார்.

இந்தச் சந்திப்பில கலந்துகொண்ட யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குடாநாட்டில் இடம்பெறும் கொலை, திருட்டு, கொள்ளைகள் தொடர்பாக, பொதுமக்கள் பொலீஸாருக்கு உடனடியாக தகவல்களை வழங்குவது தொடர்பான தொலைபேசி இலக்கங்கள் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும் - என்றார். (எ-13)



நேற்றுமுன்தினம் மாலை தம்பாட்டி கடற்கரையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட நாகமுத்து திருச்செல்வத்தின் சடலம் இது.

# வலயக் கல்வி அலுவலக ஊழியர் அலுவலகத்துக்குள் சுட்டுக்கொலை

## வாழைச்சேனையில் கொடூரம்

வாழைச்சேனை, ஏப். 25

வாழைச்சேனை வலயக் கல்வி அலுவலகத்தின் எழுதுவினைஞர் ஒருவர் நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருக்கோவிலை வசிப்பிடமாகக் கொண்ட அரியநாயகம் லங்கேஸ்வரன் (வயது-29) என்பவரே கொல்லப்பட்டவராவார். மேற்படி உத்தியோகத்தர் அலுவலகக் கடமையில் இருந்தபோது அங்கு வந்த இளைஞர் ஒருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு மோட்டார் சைக்கிளொன்றில் தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை பத்து மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலும் ஓர் அலுவலர் படுகாயமடைந்தார். இவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

வாழைச்சேனை பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-க)

# நெல்லியடியில் குண்டு வெடிப்பு சேதம் ஏதுமில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.25

வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்லியடி நகருக்கு அண்மையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது. கிளைமோர் குண்டே வெடித்தது என இராணுவத்தினர் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை.

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் நெல்லியடிக்கும் மாலி சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் குண்டு வெடித்தது. நெல்லியடிப் பிரதேச மின்சார சபை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக அது மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் படையினர் கூறினர். குண்டு வெடிப்பால் அப்பகுதி மின்சார, தொலைத் தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. விரைவில் அவை சீர் செய்யப்படும் என அதிகாரிகள் கூறினர்.

குண்டு வெடித்த இடத்திற்கு நேரெதிரே அமைந்துள்ள 'பாஸ்கரன் இன்டஸ்ரியல்' என்ற கட்டடத்தில் இராணுவத்தினர் இரவு பகலாகத் தங்கியுள்ளனர். தங்களைக் குறிவைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

இருப்பினும் கடும் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பில் மக்கள் சந்தேகமும் பீதியும் கொண்டுள்ளனர்.

(ம-15-70-120-173-202)

# ஓட்டோச் சாரதி படுகொலை: இருபாலை நேற்று வெறிச்சோடியது

கோப்பாய்,ஏப்.25

இருபாலையில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட ஓட்டோச் சாரதியின் கொலைச் சம்பவத்தினையடுத்து நேற்று இருபாலைப் பகுதி வெறிச்சோடி சோபையிழந்து காணப்பட்டது.

சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இருபாலைப் பகுதியில் உள்ள அனைத்துக் கடைகள் மற்றும் சேவை நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்தில் ஈடுபட்ட வெளியிடத்து மக்களைத் தவிர அப்பகுதியில் கிராமமக்களின் நடமாட்டங்கள் இடம்பெறவில்லை.

வழமைநிலை பாதிக்கப்பட்ட இருபாலை செயலிழந்து காணப்பட்டது. (எ-15-72)

# கிளைமோர் தாக்குதலை அடுத்து இளைஞர்கள் சுட்டுக்கொலை

## வந்தாறுமூலையில் சம்பவம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியின் வந்தாறுமூலைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இதன்போது படையினர் நடத்திய பதில் தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே இந்தக் கிளைமோரில் சிக்கினர்.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன், இவர்களிடமிருந்து கிளைமோர் குண்டுகள் மற்றும் வயர்கள் மீட்கப்பட்டன எனவும் படையினர் தெரிவித்திருக்கின்றனர். (எ-க)

# தனியார் பஸ்சேவைக் கட்டணம் அதிகரிப்பில் தற்காலிக ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.25

தனியார் பேருந்துகளின் பயணக் கட்டண அதிகரிப்பில் தற்காலிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தனியார் பேருந்துகளின் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

தனியார் பேருந்துகளின் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இதுவரையில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எமக்கு அனுப்பப்படவில்லை.

இதன்காரணமாக அரச பேருந்துகளுக்கு புதிதாக மேற்கொள்ளப்பட்ட கட்டண அதிகரிப்பே தனியார் பேருந்துகளிலும் தற்காலிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தற்காலிகமான அதிகரிப்பால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் தினமும் தலா முன்னூறுரூபா நட்டமடையவேண்டியுள்ளது.

அரச பேருந்துகளின் கட்டணத்தைவிட தனியார் பேருந்துகளின் கட்டணம் வழமையாகச் சற்று உயர்வாக இருக்கும்.

ஆனால் தற்போது அரச பேருந்துகளின் கட்டண அதிகரிப்பும் தனியார் பேருந்துகளின் கட்டண அதிகரிப்பும் ஒரே நிலையில் உள்ளது.

எனினும், சில நாள்களில் இவ் ஏற்பாட்டில் மாற்றம் ஏற்படும். - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-14-190)

# துணுக்காய் கல்வி வலயம் முன்பாக தொண்டர் ஆசிரியர் தொடர் மறியற்போர்

மல்லாவி,ஏப்.25

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்றுமுதல் மறியற்போராட்டத்தில் குதித்துள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்தினை நேற்றுக் காலை 6.30 மணியளவில் முற்றுகையிட்ட தொண்டர் ஆசிரியர்கள், அங்கு பணிகள் அனைத்தும் ஸ்தம்பிக்கும் வகையில் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், தமது பணிகளுக்காக கல்வி வலயத்துக்குச் சென்ற உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் வீடு திரும்ப நேரிட்டது.

தமக்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை இந்த மறியற் போராட்டம் தொடரும் என்று துணுக்காய் கல்விவலய தொண்டர் ஆசிரியர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.

(எ-322-13)

# நேரம்மாறி பத்து நாள்களாகியும் ஏற்பட்ட குழப்பம் இன்னும் தீரவில்லை

அச்சுவேலி,ஏப்.25

நாட்டில் நேரம் மாற்றப்பட்டு பத்து நாள்களுக்கு மேலாகியும் பாடசாலை மாணவர்களுக்கு நேரமாற்றம் குறித்த குழப்பம் தீர்ந்தபாடில்லை.

கடந்த தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்தன்று நள்ளிரவு முதல் சர்வதேச நேரக் கணிப்பீட்டிற்கு ஏற்ற வகையில் அரசு 30 நிமிடங்கள் நேரத்தை முன்னகர்த்தி பழைய நேரத்தை நடைமுறைப்படுத்தியது.

ஆனால், பாடசாலை பஸ் சேவைகள் புத்தாண்டு தினத்துக்கு முன் உள்ள நேர அட்டவணைப்படியே நடைபெற்றுவருகின்றன. யாழ். மாவட்டப் பாடசாலைகள் முதலாம் தவணையில் அப்போதைய நேரப்படி 8.30 மணிக்கு அல்லது 8.40 மணிக்கு ஆரம்பமாகி வந்தன.

தற்போதைய நேரமாற்றத்தின் பின்னர் சில பாடசாலைகள் மேலும் 30 நிமிடங்கள் முன்கூட்டியே ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளன. பெரும்பாலான பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரம் குறித்து தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாதுள்ளன.

இந்நிலையில், புத்தாண்டுக்கு முன்னுள்ள நேரப்படி புறப்படும் பாடசாலை பஸ்ஸைப் பயன்படுத்தி தற்போதைய நேரப்படி ஆரம்பமாகும் பாடசாலைக்குச் செல்லமுடியாது மாணவர்கள் திணறுகின்றனர். அலுவலகங்களுக்குச் செல்கையில் பிள்ளைகளைப் பாடசாலையில் விட்டுச்செல்லும் பெற்றோர் நேரமாற்றத்தின் பின்னர் பெரும் குழப்பநிலையில் உள்ளனர்.

ஆகவே யாழ். மாவட்டத்திற்குப் பொருத்தமான சீரான நேர அட்டவணையொன்றை திணைக்களத் தலைவர்கள் இணைந்து வழிப்படுத்துவது அவசியமாகும். (வ)



கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றுச் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களையும் அவர்கள் பயன்படுத்திய 'லாண்ட் மாஸ்ரர்' வாகனங்கள் இரண்டையும் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர். மணல் ஏற்றியவாறு கைப்பற்றப்பட்ட லாண்ட் மாஸ்ரர் வாகனங்கள் இரண்டையும் படத்தில் காணலாம். (படம்: பிரியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அச்சுறுத்திப் பணிய வைக்கும் திட்டம் விடுதலைப் புலிகளிடம் எடுபடுமா?

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யவேண்டும் என்ற பிரசாரத்தை முழு மூச்சாக முன்னெடுக்கின்றது இலங்கை அரசு.

இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹன்னவே இதை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த நடவடிக்கை மூலம் புலிகளுக்கு ஆதரவான மேற்குலகச் செயற்பாடுகளை முடக்கி, புலிகளின் முதுகை முறிக்கலாம் எ னக் கனவு காண்கின்றது இலங்கை அரசுத் தரப்பு.

ஐரோப்பிய ஒன்றியத் தடை என்ற அச்சுறுத்தலைக் காட்டிப் புலிகளை, இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுவதற்கு மசிய வைக்கலாம் என்று அரசுத் தலைமை நினைக்கின்றது போலும் .

ஆனால், அமைதி முயற்சிகளிலும் சரி, சமாதான நடவடிக்கைகளிலும் சரி, போரியல் செயற்பாடுகளிலும் சரி, அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் எத்தனங்களுக்குப் புலிகள் என்றுமே இடம் கொடுக்கவேமாட்டார்கள் என்ற கடந்த கால அனுபவங்களைத் தற்போதைய அரசுத் தலைமை மறந்துவிட்டது போலும்.

விடுதலைப் புலிகளின் சுமார் மூன்று தசாப்தகால வரலாற்றை - இலங்கைத் தமிழர்களின் அரசியல் நடவடிக்கை முன்னெடுப்புகளில் சுமார் இரண்டு தசாப்தகாலம் முன்னிலை வகிக்கும் புலிகளின் ஸ்திரமான நிலைப்பாட்டை - ஊடுருவிப் பார்ப்பவர்களுக்கு அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் தந்திரம் புலிகளிடம் பலிக்கவே பலிக்காது - எடுபடவே எடுபடாது - என்ற உண்மை நன்கு புலப்படும்

புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத் தடையை விதிக்கச் செய்வதற்கு முழுமூச்சாக முயன்று வரும் அரசுத் தலைமை, அந்த நடவடிக்கை மூலம் இரண்டு முக்கிய தவறுகளைச் செய்ய விழைகின்றது என்பதை அது புரிந்து கொள்வது நல்லது.

முதலாவது - எந்தத் தரப்போடு சமரசம் பேசி, இணக்கம் காண்பதன் மூலம் இனப்பிணக்குக்கு சுமுகத் தீர்வு காண்பதற்கு அரசு முயற்சிக்கின்றதோ அந்தத் தரப்போடு நிரந்தரப் பகையுறவை உருவாக்கும் நடவடிக்கைகயை அரசுத் தரப்பு இச்செயற்பாடு மூலம் மேற்கொள்கின்றது. சமாதான முயற்சிகளில் எதிரில் உள்ள தரப்பை நிரந்தர எதிரித் தரப்பாக்கும் நடவடிக்கையன்றி இது வேறில்லை.

அடுத்தது - இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளில் ஒன்றான தமிழர் தரப்புடன் - அவர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் - ஐரோப்பிய ஒன்றியம் வைத்திருக்கும் தொடர்பாடல்களையும் அதன் மூலம் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் நேரடியாகச் செலுத்தக்கூடிய அழுத்தம், செல்வாக்கு போன்றவற்றையும் ஒரேயடியாக இழக்கச் செய்யும் விளைவுகளை இந்த முயற்சி ஏற்படுத்தும்.

இலங்கை அரசின் நப்பாசை நிறைவேறுவது போல - ஒரு பேச்சுக்கு - விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்வதாக வைத்துக் கொண்டால் -

அதன் பின்னர், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இப்போது அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் தமிழர் தரப்புடன் நேரடியாகத் தொடர்பாடல் வைக்க முடியாமல் தள்ளி நின்று கொண்டு - வெளியிலிருந்து அறிக்கைகள், கண்டன அறிவிப்புகள் வெளியிட்டுக் கொண்டிருப்பது போல - ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஆகக் குறைந்தது கிளிநொச்சிக்குப் போய் நேரடியாகப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, விடயங்களை - மற்றத் தரப்பு நியாயங்களை - நேரில் எடுத்துரைக்கும் வாய்ப்பைக் கூட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இழந்துவிடும்.

அது மாத்திரமல்ல. தமது இருப்பையே கேள்விக் குறியாக்கி, அடிப்படை உரிமைகளைக் கூடப் பறித்து, இராணுவ ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் தங்களைத் தொலைத்துக் கட்டி, அடக்கி, ஒடுக்கி, அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் தென்னிலங்கைப் பேரினவாதத்துடன் அமைதிப் பேச்சுகளை நடத்தி, சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழர் தரப்பு - புலிகள் தரப்பு - இன்று இறங்கி வந்திருக்கின்றது என்றால், அதற்குக் காரணம் சர்வதேச கண்காணிப்பில் - கவனிப்பில் - அனுசரணை மத்தியஸ்தத்தில் - தங்களுக்கு நீதி, நியாயமான ஓர் அமைதித் தீர்வு கிட்டும் எனத் தமிழர் தரப்பு நம்பிக்கை கொண்டமைதான்.

உத்தேச ஐரோப்பிய ஒன்றியத் தடையும் அந்தத் தடை பற்றிய அச்சுறுத்தல் பூச்சாண்டியும் இவ்விடயத்தில் தமிழர்களுக்கு சர்வதேசம் மீது உள்ள நம்பிக்கையை சிதறடிக்கச் செய்யும் செயல்களாகவே அமையும்.

ஐரோப்பிய ஒன்றியத் தடைமூலம் இந்த நம்பிக்கைச் சிதறடிப்பு உறுதிப்படுத்தப்படுமானால், தங்களது உரிமைக்கான போரைத் தாங்களே முன்னின்று நடத்தி, தங்கள் உயிரையும், உடலையும், உதிரத்தையும், உடைமைகளையும் தாங்களே ஆகுதியாகக்கொடுத்து, இழந்த தாயக சுதந்திரத்தை தாங்களே மீட்டாக வேண்டும் என்ற தமிழர்களின் திடசங்கற்பத்துடன் கூடிய பற்றுறுதியை அவர்கள் மேலும் வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை அவர்களுக்கு ஏற்படும்.

சுருங்கச் சொல்வதானால் உத்தேச ஐரோப்பிய ஒன்றியத் தடை அமைதித் தீர்வு மீதான தமிழர்களின் நம்பிக்கையைக் குலைத்து, சிதறடித்து, தங்களுக்குரியதைத் தாங்கள் பிடுங்கி எடுப்பதே ஒரேவழி என்ற மாற்றமுடியாத உணர்வைத் தமிழர்கள் மனதில் ஆழமாகப் பதிக்கும்.

அதை ஏற்படுத்தத்தான் துடியாய்த் துடிக்கின்றதோ தென்னிலங்கை அரசு.....?

# முனீஸ்வரன் வீதியை ஒழுங்குபடுத்தினால் முற்றவெளியில் மினிபஸ்கள் தரிக்கும்

## தனியார் பஸ் சங்கத்தினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டால் மட்டுமே யாழ். முற்றவெளி தனியார் பஸ் தரிப்பிடம் மினிபஸ்கள் தரித்து நிற்கப்பயன்படும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட தனியார் பேருந்துகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம்தொடர்பாக அவர்மேலும் கூறியதாவது:-

யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திலிருந்து பஸ் நிலையத்துக்கு முனீஸ்வரன் வீதியூடாகவே மினிபஸ்கள் செல்லவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்வீதியில் வியாபாரிகள் நடைபாதைக் கடைகளை அமைத்துள்ளனர்.

இதனால் சனநெரிசல் அதிகமாக உள்ளது. இவ்வாறான நெருக்கடிக்குள் வீதியினூடாக பஸ்களைச் செலுத்திச் செல்ல முடியாது. அவ் வழியே செல்கையில் விபத்துகள் ஏற்படவாய்ப்புள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் முறையிட்டுள்ளோம்.

ஆனால், எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை.

முனீஸ்வரன் வீதியை எமது வாகனங்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ளக்கூடியவாறு ஒழுங்குபடுத்தினால் மறுகணமே எமது பஸ்களை முற்றவெளி தரிப்பிடத்தில் தரிப்பதற்குத் தயாராக உள்ளோம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-14)

# திருமலைச் சம்பவத்தில் இழப்பு 15 கோடி ரூபாவென மதிப்பீடு

கொழும்பு,ஏப்.25

திருகோணமலையில் சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்கள் காரணமாகச் சுமார் 15கோடி ரூபா மதிப்பிலான தமிழர்களது சொத்துக்களுக்குச் சேதமேற்பட்டுள்ளது எனத் திருமலை தொழில் வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேற்படி வன்முறைகள் தொடர்பான சேத விவரங்கள் குறித்து திருமலை தொழில் வர்த்தக சம்மேளனம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்களக் காடையர்களால் வன்முறைகள் திருமீலையில் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதன்போது 32 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கட்டுமானப்பொருள்கள் விற்பனை நிலையம், நகைக்கடைகள், உணவகங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிலையங்கள் என்பனவே பெருமளவில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டன.

மொத்தம் 9 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன். 30 லட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்களின் நேரடியான இழப்பு 3கோடியே 30 லட்சம் ரூபாவாகவும், சேதங்கள் 2 கோடியே 10 லட்சம் ரூபாவாகவும் மற்றும் வீடுகளின் சேத மதிப்பு 50 லட்சம் ரூபாவாகவும் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேதவிவரம் தொடர்பான அறிக்கையை சம்மேளனத்தின் தலைவர் ஆர்.இராஜாராம் மோகன் - வன்முறைச் சம்பவங்களைத் தணிக்கவென திருமலை சென்றிருந்த அமைச்சர் ரோகித போகொல்லாகமவிடம் சமர்ப்பித்தார்.

(க-15)

## உதயவாக்கு

*கொஞ்சம் வெளிச்சம் தரக் கூடிய மெழுகுவர்த்திபோல உன்னால் எரிந்து கொண்டிருக்க முடியுமானால் மக்களுக்குப் பயன்தரக்கூடிய தாக வாழக் கொடுத்துவைத்தவன் என்று உன்னால் கூறிக்கொள்ள முடியும்.*

*- ஜெய்ன குரு.*

## நாளை

சித்திரை 13
புதன்கிழமை
26.04.2006
திதி : சதுர்த்தசி
பின்னிரவு : 03.32 வரை
நட்சத்திரம் : ரேவதி
பின்னிரவு : 02.29 வரை
சுபநேரம் : 04.29 - 05.59
ராகுகாலம் : 11.59 - 01.29

# சுழிபுரம், நாவாந்துறை கொலைகளுக்கு உரிமை கோரியது எல்லாளன் படை

சுழிபுரம் மற்றும் நாவாந்துறையில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களுக்கு யாழ். மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது.

இது குறித்து எல்லாளன் படையின் பெயரில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில தினங்களுக்கு முன்பு சுழிபுரத்தில் சுடப்பட்ட தவசி - தவச்சந்திரன், நேற்றுமுன்தினம் நாவாந்துறையில் சுடப்பட்ட அமிர்தநாதன் - கெனடி ஆகிய இருவரும் எமது தேசத்தை அழிக்க கங்கணம் கட்டிநிற்கும் எதிரிகளுடனும், எதிரிப் புலனாய்வாளர்களுடனும் தேசத்துரோகிகளுடனும் இணைந்து தமிழ்த் தேசியப் பற்றாளர்களை எதிரியிடம் காட்டிக்கொடுத்து படுகொலைசெய்தவர்கள். அதனாலேயே இத் தீர்ப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

இவ்வாறு எதிரிகளுடனும், எதிரிப் புலனாய்வாளர்களுடனும் இணைந்து செயற்படுவோர், தேசத்துரோகிகளுக்கு துணைபோவோர் யாவரும் உடனடியாகத் தமது தமிழினத் துரோகத்தனங்களை கைவிடவேண்டும். மீறுவோர் எமது தண்டனைக்குட்படுவார்கள்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரசவித்த உடனேயே கைவிடப்பட்ட சிசு வேலணைப் பகுதியில் மீட்பு!

வேலணை,ஏப்.25


பிரசவித்த கையோடு கைவிடப்பட்ட சிசு ஒன்று நேற்றுக்காலை வேலணைப் பகுதியில் வீடு ஒன்றின் முன்பாக அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்டது.

வேலணை கிழக்கு மத்தி இரண்டாம் வட்டாரத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

படுக்கை விரிப்பினால் மூடப்பட்ட நிலையில் சிசு ஒன்று தனது வீட்டின் முன்பாகக் கிடப்பதை அவதானித்த அந்த வீட்டுக்காரர் அயலவர்களின் உதவியோடு ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார். எனினும், பொலீஸார் நீண்டநேரமாக வராததை அடுத்து கிராம அலுவலரின் உதவியுடன் சிசுவை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

நீதிமன்றத்தின் உத்தரவின்படி பின்னர் அந்தச் சிசு ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு அங்கு பராமரிக்கப்பட்டுவருகின்றது.

(ஐ-167)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு

# 'எக்ஸ்றே' தொழில்நுட்பவியலாளரை நியமிக்குமாறு கோரி மக்கள் மகஜர்

வடமராட்சி, ஏப்.25

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை 'எக்ஸ்-கதிர்' பிரிவுக்கு அதனை இயக்கக் கூடிய தொழில்நுட்பவியலாளர் ஒருவரை நியமிக்குமாறு பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கையெழுத்திட்டு யாழ்.பிராந்திய சுகாதாரப்பணிப்பாளருக்கும் வடக்கு- கிழக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளருக்கும் மகஜர் அனுப்பி உள்ளனர்.

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றம் ஊடாக பொதுமக்கள் ஒப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள கோரிக்கை கொண்ட மகஜரில் இவ் வைத்தியசாலையில் எக்ஸ்-கதிர் இயந்திரம் இருந்தும் அதனை இயக்க தொழில்நுட்பவியலாளர் ஒருவர் இன்மையால் அது செயற்படாமல் உள்ளது. இதனால் எக்ஸ்-கதிர் படம் எடுக்க வேண்டிய நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையும் தனியார் நிலையங்களையும் நாடவேண்டியுள்ளது. எனவே தொழில்நுட்பவியலாளர் ஒருவரை நியமித்து எக்ஸ்- கதிர் பிரிவை இயங்கச் செய்வதுடன் வடமராட்சிப் பிரதேசத்தையும் அதனை அண்டியபிரதேசத்தையும் சேர்ந்த நோயாளர்களுக்கு எக்ஸ்-கதிர் படம் எடுக்கக் கூடிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173) (39)

## முதியோர், அங்கவீனர், விதவைகள் விவரம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சேகரிப்பு

வலி.மேற்கு,ஏப்.25

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், அங்கவீனர்கள், விதவைகள், 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்படுகின்றன.

பிரதேச செயலக சமூக சேவைத் திணைக்களத்தினராலேயே இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன. எதிர்காலத்தில் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கே இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன எனத் தெரியவருகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன. வட்டு.வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மே மாதம் 4 ஆம் திகதியும் சித்தன்கேணி கிராம அலுவலர் பிரிவில் மே மாதம் 5 ஆம் திகதியும் இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

குறிப்பிடப்பட்ட நாள்களில் கிராம அலுவலர் பணிமனைக்கு சம்பந்தப்பட்ட சகலரையும் சமூகமளித்து பதிவினை மேற்கொள்ளுமாறு சமூகசேவை அலுவலர் எஸ்.இராஜமனோகரன் அறிவித்துள்ளார். (ஓ-175) (39)

## நலன்புரி நிலையங்களுக்கு மின் பிறப்பாக்கி

வலி.மேற்கு,ஏப்.25

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்று நலன்புரி நிலையங்களுக்கு மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்கள் இரவு நேரங்களில் கல்வி கற்பதற்கு வசதியாகவே இந்த மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

பொன்னாலை நலன்புரி நிலையம், சங்கானை நீதவான் நலன்புரி நிலையம், சங்கானை ஓடக்கரை நலன்புரிநிலையம் ஆகிய மூன்று நலன்புரி நிலையங்களுக்குமே மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டன. (ஓ-175)

## யாழ். நோயாளர்களின் வசதி கருதி சிவதொண்டன் அம்புலன்ஸ் சேவை

நல்லூர்,ஏப்.25

யாழ்.குடாநாட்டு நோயாளர்களின் வசதிகருதி அகில இலங்கை இந்துமாமன்றம் சிவதொண்டன் அம்புலன்ஸ் வாகனச் சேவையை ஆரம்பித்துள்ளது.

யாழ். நகரில் இருந்து தேவை ஏற்படின் கொழும்புக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லவும் கொழும்பிலிருந்து யாழ். அழைத்து வருவதற்கும் குறைந்த கட்டணத்தில் சேவைகள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அம்புலன்ஸ் சேவை தேவைப்படுவோர் 021 222 3305 என்ற இலக்கத்துடன் அல்லது 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்வதன் மூலம் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (8-111)

## கலைமாணி II செயன்முறை பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.25

கலைமாணி பகுதி- II, 2002 இற்கான பரீட்சைக்குரிய செயல்முறைப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

வெளிவாரி பரீட்சை அலகின் பரீட்சை மண்டபத்தில் காலை 9 மணிக்கு இப்பரீட்சை ஆரம்பமாகும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் ஏற்கனவே தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று வெளிவாரிப் பரீட்சை அலகின் உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஓ-14)

## மிதிவெடி அகற்றும் பணி நிறுத்தம்

குருநகர்,ஏப்.25

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணி கடந்த 19ஆம் திகதி தொடக்கம் கடற்படையினரின் அறிவுறுத்தலின்படி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 10 மாத காலமாக இப்பகுதியில் நடைபெற்ற மிதிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது இப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த சுமார் 2ஆயிரத்து 677 மிதிவெடிகள் அகற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-51)

## நெடுந்தீவில் வீடமைப்புத் திட்டம்

நல்லூர்,ஏப்.25

நெடுந்தீவு மேற்கில் கோட்டைக்காடு பகுதியும் கிழக்கில் ஆலமாவனக் கிராமமும் உலக வங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தினால் வீடமைப்புக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு வீடமைப்புத் திட்டங்களிலும் தலா இரண்டரை லட்சம் ரூபா செலவில் 40 வீடுகள் அமைக்கப்படும் இத்திட்டத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட 40 குடும்பங்களது விவரங்களும் தற்சமயம் பொதுமக்களின் பார்வைக்காக பொதுஇடங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

விரைவில் வீடமைப்புக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-111)

## சமூக புனர்வாழ்வு குறித்த கூட்டம்

குருநகர்,ஏப்.25

யாழ்.குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் சமூக புனர்வாழ்வு விடயம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என யாழ். குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் செயலாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன் அறிவித்துள்ளார். (ஓ-51)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

சுதுமலை தெற்கு கிழுவைவடி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம்திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை சப்பரமும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா ... (ஓ-72)


## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை அதிபர் நயினை S.சோமேஸ்வரபிள்ளை அவர்களின் அன்பு மாமன்*

**வே.ச.இரத்தினம் (V.C கிளாக்கர்)**

*அவர்கள் 12.04.2006 அன்று ஆஸ்திரேலியாவில் காலமான செய்தி கேட்டு மனவருத்தம் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

(49761) (32-11)

ஆசிரிய நலன்புரிக் கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.



## கேள்வி அறிவித்தல்

ஜி.ரி.சற் (GTZ) இனால் நிதியளிக்கப்பட்ட சுனாமி அனர்த்த புனர்நிர்மாண மீள் கட்டுமான அபிவிருத்தி வேலைகள் செய்வது தொடர்பாக கடந்த 22.04.2006ஆம் திகதிய பத்திரிகையில் வெளியான விளம்பரம் தொடர்பாக இக்ராட் தரம் பின்வருமாறு திருத்தப்படுகிறது என்பதை அறியத்தருகிறேன்.

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபாவில் | கேள்விப் பத்திர பணம் ரூபாவில் |
|---|---|---|---|
| பலநோக்கு சனசமூக நிலைய கட்டடம் (மணற்காடு) | எம் - 5 | 2,64,000 | 800 |
| பொதுச்சந்தையும் கடைத்தொகுதியும் (மணற்காடு) | எம் - 6 | 1,40,000 | 800 |
| சிறுவர் விளையாட்டு மைதானம் (மணற்காடு) | எம் - 8 | 23,300 | 500 |

மற்றைய நிபந்தனைகள் முன்னைய விளம்பரத்திற்கு அமைய ஏற்புடையதாகும்.

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
2006.04.24 (சி/49083)(32-11)

க.கணேஷ், மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபரும், யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி வீரசிங்கம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை, துண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி வீரசிங்கம் அவர்கள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-சேதுப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காந்திமதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புச் சகோதரனும் பிரேமாராணி (சுவிஸ்), ரவீந்திரன் (கனடா), விமலராணி (பிரான்ஸ்), விஜயராணி, புஸ்பாகரன் (கனடா), திருப்பதி (கனடா), விஜேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசலிங்கம் (சுவிஸ்), விஜி (கனடா), ஆனந்தன் (பிரான்ஸ்), சிவலிங்கம், சாந்தி உதயகுமார் (கனடா), தயாளினி (சுவிஸ்), செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனும் றோய் (சுவிஸ்), வினோத், றொசானி (சுவிஸ்), வேணுஜா, சுஜீனா, நீனா, ராகவி (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
T.P.: 077 6139296, 077 6980314
(49754)(30-32-11)

தகவல்: மனைவி, மகள், மகன், மருமக்கள், பேரப்பிள்ளை.

## வீரவாகு கனகசபாபதி

(ஓய்வுபெற்ற அதிபர், கொக்குவில் மே.சி.சி.த.க.பாடசாலை)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு கனகசபாபதி அவர்கள் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சக்திதாசன் (டென்மார்க்), வீரசக்திருபன் (கெயர் நிறுவனம், யாழ்ப்பாணம்), சக்தி மனோகரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜினி (டென் மார்க்), இன்பமதி (மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), நற்குணராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு.
T.P.: 0777 260218
(49756)(32-11-30)

தகவல்: க.வீரசக்திருபன் (மகன்).

## அமிர்தநாதர் கெனடி



நாவாந்துறையைச் சேர்ந்த அமிர்தநாதர் கெனடி 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் அமிர்தநாதர், காலஞ்சென்ற செல்வராணி தம்பதியரின் மூத்த மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

217, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(49759) (24-32-11)

தகவல்: செ.அமிர்தநாதர்,(தந்தை), சகோதரர்கள்.

## செல்வி சரஸ்வதி கந்தையா

(Retired Public Health Midwife)

கோப்பாய் வடக்கு, மாணிப்பாய் வீதியில் அமைந்திருக்கும் "சரஸ்வதி வாசம்" இல்லத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற Public Health Midwife செல்வி சரஸ்வதி கந்தையா அவர்கள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை அதிகாலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாணிக்கம் கந்தையா, ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாடசாலை அதிபர் கதிரேசு சின்னத்தம்பியின் அன்பு மைத்துனியும் தர்மராஜன், புவனேஸ்வரி, புவேந்திரராஜா, காலஞ்சென்ற இந்திராணி, செல்வராஜா ஆகியோரின் அன்பு சிறியதாயும் கனகேஸ்வரி, இராஜேந்திரம், செல்வமணி, சிறிஸ்கந்தராஜா,அனுசியா ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் கிழக்கு, கற்புலம் வீதியில் அமைந்திருக்கும் திருமதி சோதிமணி சச்சிதானந்தர் அவர்களின் வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பிருந்தாவனம்", கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
T.P.: 021 4590 355 (சி/49084)(32-11)

தகவல்: மக்கள், மருமக்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வன்னேரி ஆனைவிழுந்தான் மக்கள்

## உதவி செய்யுமாறு நிறுவனங்களிடம் வேண்டுகோள்

பரந்தன்,ஏப்.25

வன்னேரி ஆனைவிழுந்தான் கிராமத்தில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குடியேற்றக் கிராமத்தில் சுமார் 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஓலைக் குடிசைகளில் வசித்து வருகின்றன.

தாம் குடியமர்த்தப்பட்டு சுமார் 23 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என அங்கு குடியிருக்கும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தாம் வாழ்ந்துவருவதாகவும் வீதிகள் புனரமைக்கப்படாமையால் போக்குவரத்துச் செய்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், அங்குள்ள பாடசாலையைத் தரமுயர்த்தும் நடவடிக்கைகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை எனவும் - தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரை கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமே இங்கு கற்கமுடியும் எனவும் இதன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு ஒரு பொதுவிளையாட்டு மைதானம்கூட இல்லாத நிலையில் வயல் வெளியே மைதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்துவரும் இப்பகுதி மக்களையும் கருத்திற்கொண்டு உதவிகளை வழங்கவேண்டுமென கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(8-352)(24)




## மக்கள் வங்கியின் முல்லை. கிளை வாரத்தில் 5 நாள்கள் இயங்கும்

புதுக்குடியிருப்பு,ஏப்.25

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளை தொடர்ந்து வாரத்தில் ஐந்து நாள்களும் முல்லைத்தீவில் இயங்கும் என அதன் முகாமையாளர் எஸ்.பாலராசா அறிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளை 1990ஆம் ஆண்டுமுதல் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் இயங்கிவந்தது.

1997ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் பின்னர் முல்லைத்தீவில் வாரத்தில் இரண்டு நாள்கள் இக்கிளையின் நீடித்த கருமபீடம் ஒன்று இயங்கி வந்தது.

எனினும், வாடிக்கையாளரின் வசதி கருதி எதிர்வரும் முதலாம் திகதிமுதல் முல்லைத்தீவுக் கிளையாக வாரத்தின் ஐந்து நாள்களும் இயங்கும் எனவும் அதேபோல் புதுக்குடியிருப்புக் கிளையும் இயங்கும் எனவும் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(8-353)(24)

## உபதபாலகத்தின் ஆண்டு விழாவையொட்டி சிரமதானம்

பரந்தன்,ஏப்.25

வட்டக்கச்சி உபதபாலகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி அண்மையில் சிரமதானப் பணி நடைபெற்றது.

கடந்த 18ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை வட்டக்கச்சி தனியார் கல்வி நிலையமான நியூட்டன் அக்கடமி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் இச்சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதானப பணியில் பெருமளவான ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். வட்டக்கச்சி உபதபாலகத்தின் 50 ஆவது ஆண்டு விழா நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(8-352)

## செட்டியகுறிச்சியில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் 20 வீடுகள் அமைப்பு

பூநகரி,ஏப்.25

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் செட்டியகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் 20 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் ஒவ்வொரு வீடும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியானது எனவும் செட்டியகுறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சிறிபாலன் தெரிவித்தார்.

(8-403)(32)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை முதல்

வட்டக்கச்சி,ஏப்.25

'கியூடெக்' நிறுவனம் வழங்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

நாளை புதன்கிழமை புதுக்குடியிருப்பு, கரைச்சி, ஒட்டுசுட்டான் ஆகிய கோட்டங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் நாளைமறுதினம் வியாழக்கிழமை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய கோட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டாவளைக் கோட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சிக் கோட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவுகள் வழமையான இடங்களில் வழமையான நேரத்தில் வழங்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் வன்னிப் பிராந்திய 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

(8-405) (24)

## கட்டுமானத் தொழிலாளர்களை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.25

தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தால் தாயகப் பிரதேசத்தில் கட்டமானத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேசன், மரவேலை செய்பவர், வர்ணம் பூசுனர், மின்னிணைப்பாளர், மின்ஒட்டுநர், நீர்க்குழாய் இணைப்பாளர் போன்ற தொழிலாளர்களின் நலன்கருதித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான பதிவுகள் பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சிப் பிரதேச உபபணிமனை, ஸ்கந்தபுரம் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமசேவையாளர்கள் ஊடாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகிய இச்செயற்பாடுகள் எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் -

இதுவரை பதிவுசெய்யாத தொழிலாளர்கள் குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுசெய்ய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-14)(32)

## துணுக்காய் பிரதேசத்தில் முதலுதவி வகுப்புகள்

மல்லாவி,ஏப்.25

மாணவர் மத்தியில் முதலுதவி தொடர்பான அறிவினை விருத்தி செய்வதையும் விசேட பயிற்சிபெற்ற முதலுதவி அணி ஒன்றை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு தமிழீழ சுகாதார சேவையினர் துணுக்காய் பிரதேசத்தில் முதலுதவிப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளனர்.

மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம், துணுக்காய் அ.த.க. பாடசாலை, அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடந்த 15ஆம் திகதி இப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஆதரவுடன் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகளில் தரம் 8, 9, 10 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

(8-322)(32)

## கால்நடை வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு

பூநகரி,ஏப்.25

பூநகரி செட்டியகுறிச்சிக் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தின்கீழ் அண்மையில் கால்நடை வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் 'நியாப்' உதவித்திட்டப் பணிப்பாளர் பி.கிரிதரன், 'நியாப்' திட்ட இணைப்பாளர் எஸ்.விஜயன், பூநகரி கால்நடை வைத்தியர் கௌரிதிலகன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெற்புலவு, நெடுங்குளம், நல்லூர், ஆலங்கேணி போன்ற இடங்களிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன.

(8-14-403)(32)






மல்லாவி மத்திய கல்லூரியில் தமிழீழ வைப்பகத்தின் பள்ளிச் சேமிப்பு அலகு ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் தி.சத்தியபாலன் மங்கள விளக்கேற்றுவதையும் பள்ளிச் சேமிப்பு அலகின் பெயர்ப்பலகையைத் துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் திரைநீக்கம் செய்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

## ஜெயபுரம் வீதிகள் சேதமடைந்த நிலையில்

பூநகரி,ஏப்.25

பூநகரி - ஜெயபுரம் கிராமத்தின் சிறுவீதிகள் பற்றைகள் வளர்ந்த நிலையிலும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுவதால் இக்கிராம மக்கள் போக்குவரத்தில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம் வடக்கு அடங்கலாக 18 கிலோமீற்றர் நீளம் கொண்ட சிறுவீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இதனால் இக்கிராமத்தில் வாழுகின்ற 400இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் மக்களும் நாளாந்தம் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, அதிகாரிகள் இதுவிடயத்தில் அதிக அக்கறை கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

(8-403) (24)

## பரந்தன் - குமரபுரம் வீதி மிக மோசமான நிலையில்

பூநகரி,ஏப்.25

கிளிநொச்சி, பரந்தன் சந்தியிலிருந்து குமரபுரம் கிராமத்திற்குச் செல்லும் 2 கிலோமீற்றர் நீளம் கொண்ட பிரதான வீதியும் 15 கிலோமீற்றர் நீளம் கொண்ட சிறுவீதிகளும் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இக்கிராம மக்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

அத்தோடு, வீதிகளுக்குத் தகுந்த வடிகாலமைப்பும் இல்லாமையாலும் வீதிகள் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சி மீது இராணுவத்தினர் [illegible] படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குமரபுரம் கிராம மக்கள் 2002ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தனர். ஆயினும், இவ்வீதி புனரமைக்கும் பணி எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இதனால் இக்கிராமத்தில் வசிக்கும் 200இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் மக்களும் பெரும் போக்குவரத்து அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(8-403) (24)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு உதவி

மல்லாவி,ஏப்.25

அண்மைக் காலத்தில் இராணுவப் நெருக்குவாரத்துக்கு அஞ்சி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த 626 குடும்பங்கள் துணுக்காய் பிரதேசத்தில் தங்கியுள்ளன.

உலர் உணவு நிவாரணத்திற்காக முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தால் 85 குடும்பங்களுக்கு இரு வாரத்திற்கான பொருள்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டது என்றும், ஆயினும் துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் 626 குடும்பங்களுக்கும் நான்கு வார கால உலர் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது எனவும் துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்

(8-322) (32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வந்து போவோரை அவதானிக்க முகமாலைப் பகுதியில் புதிய பிரிவு

. யாழ். மாவட்டத்திற்குள் நுழைவோரை அவதானிப்பதற்கென முகமாலையில் படையினரால் விசேட பிரிவொன்று உருவாக்கப் பட்டுள்ளது. இப் பிரிவு இராணுவ புலனாய்வுத்துறையின் விசேட நெறிப்படுத்தலின் கீழ் இயங்கிவருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டுக்குள் உள்நுழைவோரையும், வெளிச்செல்வோரையும் அவதானித்து வரும் இக்குழுவினர் குடாநாட்டிற்கு உள் நுழைவோரின் விவரங்களை உடனடியாகவே சம்பந்தப்பட்ட நபர் செல்கின்ற இடங்களிற்கு பொறுப்பாக இருக்கின்ற படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்குகின்றனராம். இதே வேளை, அங்கிருந்து மீள்வோரும் இப் பிரிவு வழங்கும் தகவல்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22-11-1958

உதிர்வு
25-04-2003

எங்கள் இதயக் கோயிலின்
இதய தீபம் ஒன்று அணைந்து
இன்றுடன் ஆண்டு மூன்று
ஆனதுவோ?
வேதனையோ விலகவில்லை
விழி தேடும் இடம் எல்லாம்
உம் விம்பமே தெரிகிறது.
கண்கள் தினம் சொரியும்
கண்ணீர் பூக்களாலே
அஞ்சலி செய்கின்றோம்.

**வீரசிங்கம் சகாயராஜா**
**(சின்னமணி)**
*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.*
(49713)(26-39-11-17)

உம்பிரிவால் துயருறும்:
பெற்றோர், மனைவி,
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
10 - 04 - 1923

உதிர்வு
26 - 03 - 2006

அமரர்
**நாதன் சின்னத்தம்பி**
(வியாபாரியார்)
*(ஸ்தாபகர்-சிவானந்தா வி.கழகம், அல்வாய், முன்னாள் கிராமசபை உறுப்பினர்)*

அன்புடன் முகம் மலர்ந்து அரவணைக்கும் ஐயா
இப் புவியில் உமையிழந்து நாம் வாட
தப்பேதுமில்லாமல் வளர்த்தெடுத்த உம்மக்கள்
தரணியிலே தவிப்பது தான் தெரியலையோ?

(49703)(52-11-17)

சி.சிவபாதர் (மெக்கானிக்)
கட்டைப்புளியடி, அல்வாய் மேற்கு,
அல்வாய்.

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



*தோற்றம்*
*03 . 01 . 1928*

*மறைவு*
*26 . 03 . 2006*

அமரர்
**கந்தையா தம்பிராசா**

மாதமோ ஒன்று மறைந்திட
மறையவில்லை உங்கள் நினைவுகள்
அகவையோ எண் பத்து தாண்ட முன்னே
அவசரமாய் உறங்கி விட்டீர் காலனோடு
பூவுலகை விட்டகன்ற உங்களுக்கு
பூக்களே சமர்ப்பணம் கண்ணீராய்
பாக்களே சேரட்டும் இறைவனுக்கு
பாசமுள்ள உம் ஆத்மாவே சாந்தியடைய.

*அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று(25.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெற்று, அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.*

தற்காலிக முகவரி:- செம்பாட்டு வீதி, துன்னாலை மத்தி, கரவெட்டி. (49731)
நிரந்தர முகவரி:- எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ். (52-17-11)

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், ஏப்.25

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. ஆலய மூலஸ்தானம், வைரவர் கோயில் ஆகியன புதுப்பித்து புதிய சண்டேஸ்வரர் ஆலயம் கட்டுதல் ஆகிய கருமங்கள் நடைபெற்று விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இப் பணியை நிறைவு செய்ய திருப்பணிச் சபை ஒன்று புதிதாக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டுவருகின்றது. (202-28)

## அதிகாரிகள் இடமாற்றம்

தென்மராட்சி, ஏப்.25

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இரு உயரதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உதவிப் பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உதவிப் பிரதேச செயலர் ய.பரந்தாமன் யாழ். செயலக உதவி அரச அதிபர் தலைமைப் பீடத்திற்கும் கணக்காளர் ஜீ. கில்பேட்குணம் கிளிநொச்சி மாவட்டசெயலக பிரதான கணக்காளராகவும் இடம்மாற்றம் பெற்றுள்ளனர். (202-117)

## திருமலையில் குண்டுப் புரளி

திருமலை, ஏப்.25

திருகோணமலை நகரில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற பாரிய சத்தத்தினால் மக்கள் பீதியுற்றனர்.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட கிளைமோர் குண்டு கடற்கரைப் பகுதியில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டபோது எழுந்த சத்தமே அது வென்பது பின்னர் தெரியவந்தது.

இந்தப் பாரிய சத்தம் கேட்டவுடன் நகரில் நின்றிருந்த மக்கள் கலைந்து தமது வீடுகளை நோக்கி விரைந்தனர். குண்டு கண்டுபிடிக்கப்பட்ட பகுதியில் பொலீஸார் தேடுதல் நடவடிக்கையொன்றையும் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## முறைசாராக் கல்விப் பயிற்சி

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் மனை முகாமைத்துவம் முறைசாராக் கல்வி பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி வலிகாமம் கல்வி வலயத்தினால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

பயிற்சியில் சேரவிரும்புபவர்கள் பாடசாலை அதிபர் அ.சதானந்தனுடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

## வெள்ளவத்தை பார்மஸியில் கொள்ளையர்கள் கைவரிசை

கொழும்பு, ஏப்.25

துப்பாக்கிமுனையில் கடைக்குள் ஊழியர்களை வைத்துப் பூட்டிவிட்டுப் பெருந்தொகைப் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவமொன்று வெள்ளவத்தை பார்மஸி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக மருந்துகளை கொள்வனவு செய்வதுபோல் வந்த இருவர் பார்மஸி ஊழியர்களுடன் முரண்பட்டுவிட்டுச் சென்றுள்ளனர். பின்னர் சுமார் 15 நிமிடங்கள் கழித்து - கடையை மூடும் சமயம் வந்த மேற்படி இருவரும் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டி கடையினை உள்புறமாகப் பூட்டியுள்ளனர். அதன்பின்னர் கடைக்குள் இருந்த 90 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் வேறாக இருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தினையும் தம்முடன் எடுத்துச் சென்ற கொள்ளையர்கள் கடையை விட்டு வெளியேறி காரில் தப்பமுயன்றுள்ளனர்.

எனினும், கடை ஊழியர் ஒருவர் கொள்ளையர் ஒருவரைப் பிடிக்க முயன்றபோது அவர் மீது கொள்ளையர் தாக்கிவிட்டு தப்பித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து வெள்ளவத்தைப் பொலீஸாருக்குமேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்.
சென்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ராஞ்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics



## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

I . டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

*பயணம் ஒரு மாதத்திற்குள்*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 100 |
| *கம்பி கட்டுபவர் | 50 |
| *மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| *மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| *மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| *அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| *மின்சார வேலையாள்கள் ( வீட்டு மின் இணைப்பு) | 20 |
| *வாகன மின்சார வேலை செய்பவர் | 10 |
| *பைப் பொருத்துபவர்கள் | 20 |
| *ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| *பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின்கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| *எலக்றொனிக் மெக்கானிக் | 10 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

*தொடர்பு: மைக்கல்*
*0777 279813*

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

II . சவுதி:-

*சவுதி அரேபியாவில் முதன்மைக் கம்பனி (அரம்கோ) உடனடி வேலைவாய்ப்பு. 10 நாள்களில் பயணம். விசா கையிருப்பில் உண்டு.*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 8 |
| *கணக்காளர் | 4 |
| *பார வாகனச் சாரதி | 15 |
| *மேசன் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 20 |
| *பிளம்பர் (பைப் பொருத்துநர்) | 10 |
| *மின் இணைப்பாளர் | 10 |
| *பாரவாகன ஓட்டுநர் (ரவர் ரெயின், கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 15 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழிலுக்குரிய சான்றிதழ் இருப்பின் கொண்டுவரவும்.

*தொடர்பு: மைக்கல் 0777 279813*
*குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.*

III . மலேசியாவில் வேலைவாய்ப்பு:

*மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்*

| தொழில்கள் | தொகை |
|---|---|
| வேலைத்தள உதவியாளர்கள் | |
| *நாரல்ஸ் கம்பனி | 30 |
| *கையுறைக் கம்பனி | 30 |
| *கடைப்பந்துக் கம்பனி | 40 |
| *இலத்திரனியல் கம்பனி | 40 |
| *சொகுசு ஆசன கம்பனி (குசன்) | 75 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச் சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)

*தொடர்பு: 0777 279813*
*மைக்கல்*
*(49527)(51-)*

*குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர மக்களின் மேம்பாட்டுக்கான நிலத்தடி நீர்ப் பாதுகாப்புத் திட்டம்

**யாழ்ப்பாண மாநகர சபையுடன் இணைந்து ஜேர்மன் அரசினால் நிதியளிக்கப்பட்ட G.T.Z.- ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுறவு -எஸ்ச்போன்/ஜேர்மனி I.P. - செயற்றிட்ட திட்டமிடல் நிறுவனம் -ஸ்ருட்காட்/ஜேர்மனி எனும் நிறுவனங்களினால் அமுலாக்கப்படும் யாழ்ப்பாண நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் செயற்றிட்டம் ஜூன் 2005இல் தொடங்கியது.இச்செயற்றிட்டத்தின் கீழ் நிலத்தடி நீர் மாசடைதல்,சுகாதாரம்,திண்மக் கழிவு முகாமைத்துவம் எனும் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களை விளக்கும் கட்டுரை இது.**

கிட்டத்தட்ட 84,000 மக்களைக் கொண்ட யாழ்ப்பாண நகரம் தனது தேவைகளுக்காக நிலத்ததடி நீரின் மீது தங்கியுள்ளது. புவிசரிதவியல் ரீதியாக இந் நகரம் அடையற் பாறைகளால் ஆக்கப்பட்டுள்ளதோடு, நீர் மேடை மேற்பரப்பு மட்டத்திற்கு மிக அருகில் காணப்படுகிறது.எனவே, தோண்டப்பட்ட கிணறுகளை நிர்மாணித்தல் இலகுவாகும். இந் நகரத்திற்கு வீட்டு இணைப்புகளுடனான ஒன்றிணைக்கப்பட்ட குழாய் வழி நீர் வழங்கல் திட்டம் இல்லை. நிலவும் நீர் வழங்கள் திட்டங்கள் மிக பலவீனமான பிரதேசங்களுக்குப் பொது நீர்க் குழாய்களின் ஊடாக மட்டுமே நீரை வழங்குகின்றன. இத்திட்டத்திற்கான நீர்,மாநகர சபை எல்லைக்கு வெளியே அமைந்துள்ள கோண்டாவில்,திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருந்து பெறப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நிலத்தடி நீரினைப் பாதுகாத்தல்,விசேடமாக யாழ்ப்பாண நகரில் முக்கியமானதும் உடனடியானதுமான சமுதாய எழுவினையொன்றாகும். இப்பிரதேசம் போதியளவு மழை வீழ்ச்சியைப் பெறுவதனால், கிடைக்கப்பெறும் நிலத்தடி நீர் வளங்கள் நகரத்தின் கோரலைப் பூர்த்தி செய்யவதற்கு போதுமானவையாகும். எவ்வாறாயினும் அடையற்பாறை,புவிசரிதவியல் படைகள், ஒன்றிணைக்கப்பட்ட கழிவகற்றல் திட்டம் இல்லாமை என்பவற்றின் காரணமாக நிலத்தடி நீர் மாசடைகிறது.உயர் குடித்தொகை அடர்த்தி,சிறு வளவுகளுடனான வீடுகள், கிணற்றுக்கும் மலசலகூடத்திற்கும் இடையே சிறிய தூரம்,ஒழுங்காகப் பேணப்படாத வடிகால் திட்டம் மற்றைய பலவீனமான சுகாதாரப் பழக்கங்கள் ஆகியன நீர் மாசடைதலுக்கான பிரதான காரணங்களாகும். மேலும்,திறந்த தோண்டப்பட்ட கிணறுகளும் அழுக்கு,தூசு என்பவற்றிலிருந்து மாசடைந்த நீர் கிணற்றினுள் மீளப்பிரவேசிப்பதனால் மாசடைகின்றன.நகரின் கரையோரப் பிரதேசத்தில் உள்ள நீரின் தரம் உவர்ப்பானதும் மாசுற்றதுமாகும். ஒரு காலத்தில் சதுப்பு நிலங்களாக இருந்த - தற்போது அடர்த்தியாகக் குடியேற்றப்பட்டுள்ள - இக் கரையோரப் பிரதேசங்கள் நகரத்தின் துகள்களினாலும் திண்மக் கழிவினாலும் நிரப்பப்பட்டவையாகும். கரையோரப் பிரதேசத்தின் காணி மீட்டெடுத்தல் விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. அதன் விளைவாக ஊறல் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பெரும் பிரச்சினையாகும். எனவே, யாழ்ப்பாண குடா நாட்டில் விசேடமாக யாழ்ப்பாணம் நகரில் நிலத்தடி நீர்ப் பிரச்சினை ஒரு பிரதான சமூக - பொருளாதாரக் கரிசனையாகும். இச்செயற்றிட்டத்தின் வெற்றி பல துறைகளில் நகரக் குடித்தொகைக்கு பாரிய நலனைக் கொணரும். இச்செயற்றிட்டத்தின் இலக்குகள் பின் வருமாறு.

1. நிலத்தடி நீரின் தரத்தை மேம்படுத்தல்.

2. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளவையும் உள்ளடக்கி மாநகரப் பிரதேசத்தில் தேகாரோக்கியத்தை மேம்படுத்துதல், தேகாரோக்கியம் நிலத்தடி நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவுவதோடு அது நீர்காவு நோய்களைக் குறைப்பதற்கு உதவும்.

3. நகர சுற்றாடல் நடவடிக்கைகள் தொடர்பாக மாநகர சபைக்கு வலுவூட்டுவதோடு திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் அவர்களது ஆற்றலைக் கட்டியெழுப்புதல்.

4. நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு, தேகாரோக்கியம், திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பவற்றில் வினையாற்றலான பொதுசன விழிப்புணர்வையும் பாடசாலைப் பிள்ளைகள் உட்பட பிரஜைகளின் பங்குபற்றலையும் உருவாக்குதல்.

### முன்னோடிப் பிரதேசத்தைத் தெரிவு செய்தல்

ஆழமான கற்கையொன்றை மேற்கொள்வதற்கும் செயற்படுத்தக்கூடிய காரணங்களுக்காகவும் மாநகரப் பிரதேசத்தின் சிறிய பகுதியொன்று முன்னோடிப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டது. இப் பிரதேசம் நகரக் குடித்தொகையின் அண்ணளவாகப் பத்து சதவீதத்தைக் கொண்டுள்ளது. நகரின் உட்பிரதேசத்தில் உள்ள மக்களுள் பெருந்தொகையானோர் வேலைக்காகவும் சேவைகளைப் பெறுவதற்காகவும் இப்பிரதேசத்துக்கு வருகின்றனர். நுண் மட்டத்தில் வித்தியாசமான பௌதிக, சமூக - பொருளாதார செயற்பாட்டுப் பிரதேசங்கள் இம்முன்னோடிப் பிரதேசத்தினுள் அடங்குகின்றன. உப பிரதேசத்தின் வித்தியாசமான வகைகள் நடுத்தர வகுப்பு , கீழ் நடுத்தர வகுப்பு, வறிய, குடிசைப் பிரதேசங்கள், வைத்தியசாலைப் பிரதேசம், நிறுவனம் சார் பிரதேசம், வர்த்தகப் பிரதேசம் ஆகியனவாகும். காணி பயன்படுத்துதல், சமூக- பொருளாதார நிலைகள் எனபவற்றின் அடிப்படையில் முன்னோடிப் பிரதேசத்தினுள் பின்வரும் வலயங்கள் இனங்காணப்படலாம். ஒவ்வொரு பிரதேசமும் மற்றவற்றிலிருந்து நிலத்தடி நீர் தரம், வடிகால் வீடமைப்பு, தேகாரோக்கியம், குடித்தொகை, திண்மக்கழிவு உருவாகல் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது.

முன்னோடிப் பிரதேசத்தில் உள்ள குறிப்பான வலயங்கள் பின்வருமாறு:-

1. புகையிரத நிலையம் - கீழ் நடுத்தர வகுப்பு வதிவிடப் பிரதேசம்.
2. போதனா வைத்தியசாலை - சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகள்.
3. பேருந்து நிலையம் - போக்குவரத்துச் செயற்பாடுகள்.
4. வேம்படி - நிறுவனம் சார் செயற்பாடுகள்.
5. மத்திய வியாபார பிரதேசம் - வியாபாரம் , சந்தைப்படுத்துதல், சேவைகள், செயற்பாடுகள்.
6. முஸ்லிம் பிரதேசம் - மோசமாக சேதமடைந்த வீடமைப்பும் தற்போது இடம்பெயர்ந்தோரால் குடியேற்றப்பட்டுள்ளது.
7. கொட்டடி - கீழ் நடுத்தர வகுப்பு, கீழ்வருமான இடம்பெயர்ந்த மக்கள் குடியேறிய வதிவிடப்பிரதேசம்.
8. நாவாந்துறை - பாரம்பரிய றோமன் கத்தோலிக்க மீனவக் கிராமம்.
9. கண்ணபுரம் - கீழ் வருமான குழுவிற்கான மீட்கப்பட்ட காணியின் மீது கட்டப்பட்ட வீடமைப்புத் திட்டம்.
10. கன்னபிட்டி/ மண்பிட்டி - கரையோர மீட்கப்பட்ட காணியில் கீழ் வருமானக் குழுக் குடியேற்றம்.
11. நாவாந்துறை கரையோரம் -காணியற்ற கீழ் வருமான மீனவ அத்துமீறிய குடியேற்றம்.

முன்னோடிப் பிரதேசத்தின் ஒவ்வோர் உப பிரிவிலும் நிலத்தடி நீரின் தரம், தேகாரோக்கியம், திண்மக்கழிவு, ஆற்றல் பிரச்சினைகள் என்பன ஒன்றுக்கொன்று வித்தியாசமானது.

முன்னோடிப் பிரதேசத்தில் கடந்த 7 மாதங்களுள் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. முன்னோடிப் பிரதேசத்தில் உள்ள வெவ்வேறு வலயங்களில் இருந்து 69 தோண்டப்பட்ட கிணறுகளின் எழுமாற்று மாதிரியொன்றின் அடிப்படையில் நிலத்தடி நீரின் தரத்தைக் கணிப்பீடு செய்வதற்காக கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. மாதிரி நீர் யாழ்ப்பாணம் நீர் வள சபையில் பகுப்பாயப்பட்டு, பகுப்பாய்வுப் பெறுபேறுகள் உரிய வதிவினருக்கும் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டு விளக்கம் வழங்கப்பட்டது. தமது கிணற்று நீரைப் பாதுகாப்பதற்கு முன்னெச்சரிக்கை [illegible] தற்கு அவர்கள் [illegible]னர்.

2. திண்மக் கழிவு உருவாகல் கோலத்தின் அளவையும் வகைகளையும் கணிப்பீடு செய்வதற்காகக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இரு பைகள் வழங்கப்பட்டன. ஒன்று அவர்களது குடும்ப சமையலறைக் கழிவுகளை இடுவதற்கும் - மற்றையது போத்தல்கள், பேணிகள், உலோகப் பாகங்கள், ஏனையவை போன்ற மீளசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை இடுவதற்கும் ஆகும். இக்கற்கை திண்மக் கழிவு சேகரித்தல், மக்கள் பங்குபற்றல் என்பன தொடர்பான எழுவினைகளை இனங்காண்பதற்கு உதவின.

3. முன்னோடிப் பிரதேசத்தில் திண்மக் கழிவுகளை சேகரித்தலும் அகற்றுதலிலும் மாநகர சபையின் ஆற்றுகையைக் கணிப்பீடு செய்வதற்காக இன்னொரு கற்கை மேற்கொள்ளப்பட்டது.

4. வைத்தியசாலையில் உள்ள திண்மக் கழிவுகளின் இயல்பும் வைத்தியசாலைக்கும் மாநகரசபைக்கும் இடையே இருந்த கழிவகற்றல் ஒழுங்குகளும் ஆராயப்பட்டன. சிறிய கையியக்க (Incinerator) பயன்படுத்தலிலும் கல்லுண்டாயில் உள்ள கழிவு கொட்டுதல் தளங்களைப் பயன்படுத்தலிலும் வைத்தியசாலை முகங் கொடுத்த பிரச்சினையை அணி ஆராய்ந்தது.

5. முன்னோடிப் பிரதேசத்தின் நகர திண்மக் கழிவகற்றலின் முகாமைத்துவம் தொடர்பாக மாநகர சபைக்கும் கற்கை அணிக்கும் இடையே சாத்தியங்கள் துருவியாராயப்பட்டதோடு, வித்தியாசமான முகாமைத்துவ மாதிரிகளைக் கடைப்பிடிப்பதன் சாத்தியத் தன்மையும் பரிசோதிக்கப்பட்டது.

6. பல களச் சுற்றுலாக்களின் போது அணி உறுப்பினர் உள்நாட்டு மக்களுடனும் குடும்பங்களுடனும் பல ஊடாட்டங்களை ஏற்படுத்தினர். கலந்துரையாடலுக்கான விடயங்கள் நீர், தேகாரோக்கியம், திண்மக் கழிவு என்பனவாகும். இக்கலந்துரையாடலின் போது பல ஐயங்கள் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டன.

7. வினையாற்றலான விதத்தில் பொதுசன விழிப்புணர்வை ஏற்படுத்துற்காக சுவரொட்டிகள், மடிப்பேடுகள், புதினப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கான கட்டுரைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.

இக்கற்கை நகர மக்களுக்கு உரிய காலத்திற்கானதும் பொருத்தமானதும் நலன்புரிவதுமானதும் ஆகும். நவீன ஒன்றிணைக்கப்பட்ட குழாய் நீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம், திண்மக் கழிவகற்றல் என்பனவற்றை விருத்தி செய்வதற்கான எண்ணமும் திட்டங்களும் இருந்தபோதும் இவ்வகையான பாரிய செயற்றிட்டம் நிதியின் கிடைத்தற்றன்மையைப் பொறுத்து நீண்ட காலத்தை எடுக்கும். நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் செயற்றிட்டம் மக்களின் பங்குபற்றலுடன் மாநகர சபையின் சிறந்த ஆட்சியுடனும் கணிசமானளவு நல்ல பெறுபேறுகளைக் கொண்டு வருவதற்குக் கருதப்பட்டுள்ள சிறு நடைமுறை சாத்தியமான குறைந்த செலவுள்ள செயற்றிட்டமாகும். எனவே, நகரத்தினதும் அதன் குடியிருப்பாளர்களினதும் வாழ்க்கைச் சுற்றாடலை மேம்படுத்துவதற்கு ஒத்துழைத்து செயற்பாட்டுடன் பங்குபற்றுதல் யாழ்ப்பாண நகரத்தில் வசிப்போரிடம் தங்கியுள்ளது. ★

## வாசகர் திருமுகம்

### மின் உற்பத்தியைப் பெருக்காமல் மின் குமிழ்களை அணைப்பதா?

மின்வெட்டு நேரத்தை குறைப்பதற்கு ஆகக் குறைந்தது இரண்டு மின்குமிழ்களையாவது அணையுங்கள் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் வெளியிட்ட செய்தியைப் படித்தோம்.ஊடகங்கள் இதன் மூலம் திருப்தியடைந்தனவோ என்னவோ,மின் பாவனையாளர்களாகிய நாம் திருப்தியடையவில்லை.

இரண்டு பிரத்தியேக மின் உற்பத்தி நிறுவனங்களின் பிரச்சினை பற்றி எமக்கு தெளிவுபடுத்தப்படவில்லை. அப்படி அவர்களால் பிரச்சினை இல்லை எனின், அவர்கள் தரவேண்டிய அல்லது அவர்கள் பெறுகின்ற நிதிக்கேற்ப மின் உற்பத்தி செய்ப்படுகின்றதென்றால் இதற்கான முழுப் பொறுப்பும் மின்சார சபையே ஏற்க வேண்டும்.

மின் உற்பத்திக்கு ஏற்ற விநியோகத்தை செய்யவேண்டியது மின்சார சபையே.ஒப்பந்தப்படி மின் உற்பத்தி செய்து தரவேண்டியது அந்த இரண்டு நிறுவனங்களின் பொறுப்பு.நிறுவனங்கள் தம் கடமைகளைச் சரிவரச் செய்தால்,அதன் பிறகு தனது கடமையைச் செய்யவேண்டியது மின்சார சபை. ஆக உற்பத்திக்கு ஏற்ப விநியோகத்தைச் செய்யவேண்டிய மின்சாரசபை பொதுமக்களிடம் -பாவனையாளர்களிடம் பணிவான வேண்டுகோளை விடவேண்டிய தேவை என்ன?

சபையின் வேண்டுகோள் மேலெழுந்தவாரியாகப் பார்தால் அல்லது நியாயமாகப் பார்த்தால் சரியான தீர்வாகத் தோன்றும்.ஆனால், உற்பத்திக்கு மேலதிகமாக விநியோகம் செய்யமுற்பட்டதால் தானே பிரச்சினை.அப்படிப் பார்த்தால் 2 என்ன 4மின்குமிழ்களை நிறுத்தினாலும் பிரச்சினை தீர்ந்து விடும் என்று சொல்வது எந்த விதத்தில் சரி?

தினமும் பத்திரிகைகளில் பார்த்தால் புதுப்புது விநியோகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.வெவ்வேறு பிரதேசங்களில் நடைபெறுகின்றன.

ஆக,உற்பத்தியைக் கூட்டாமல் இப்படியே விநியோகங்கள் (புதியன மற்றும் மேலதிகம்)கூடிக்கொண்டு போகும் போது ஒரு கட்டத்தில் இரவு 7மணியிலிருந்து 9 மணிவரை மின்சாரத்தைப் பாவிக்கவேண்டாம் என வேண்டுகோள் விடுக்க வேண்டிய நிலையும் சபைக்கு ஏற்படலாம்.

உண்மையில் ஒப்பந்தப்படி மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகத்திற்கு சபைக்குத் தரப்படுமாக இருந்தால்,ஏற்பட்டி ருக்கின்ற -மேலும் ஏற்படப்போகின்ற மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சபை என்ன நடவடிக்கை எடுத்தது;எடுக்கிறது அல்லது எடுக்க உள்ளது என்பதை ஓரளவு சுருக்கமாகத்தன்னும் விளக்கமளித்திருக்கலாம் அல்லவா?

உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் விநியோகத்தை மட்டும் கூட்டுக் கொண்டிருந்தால் இரண்டு மின் குமிழ்களை மட்டுமல்ல நான்கு மின் குமிழ்களை நிறுத்தினாலும் முக்கியமான இரவு நேர மின்வெட்டைத் தவிர்க்க முடியாது. அது மட்டுமல்ல இப்படியே போனால் முழு மின் குமிழ்களையுமே அதாவது இரவில் 7 மணிமுதல் 9 மணி வரை மின்சாரமே பாவிக்கவேண்டாம் என கேட்கும் காலம் வந்துவிடும்.

இது திடீரென ஏற்பட்டதல்ல. விநியோகங்களை மெல்ல மெல்ல கூட்டிக்கூட்டிக் கொண்டு போக; உற்பத்தியும் அதற்கேற்ப மெல்ல மெல்ல கூட வேண்டும்- கூட்டியிருக்கவேண்டும் என்பது மின்சார சபைக்கு வேறுயாரும் சொல்லவேண்டிய தேவை அல்லது அவசியம் இல்லை. ஆனால் , முறையான முன்கூட்டிய திட்டமிடல் நடைபெறவில்லை. எதிர்பார்க்காதது யாரின் பிழை. திட்டமிடல் (Planning), அபிவிருத்தி (Development), வர்த்தகம்(Commercial) கட்டமைப்பு நிர்மாணப் பகுதிகள் ஏன்.

-இருட்டில் இடறுப்படும் மின் பாவனையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிகழ்வுகளின் காட்சித் தொகுப்பு




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தினால் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிகழ்வின்போது மகளிர் அபிவிருத்தி அலுவலர் உதயணி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை அலுவலர், உதவித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (சு)




தமிழ் செய்தி தகவல் மையத்திற்கு, மனிப்பாய் றோட்டறக் கழகம் அண்மையில் ஒரு தொகுதி கணனி உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியது. கழகப் பிரதிநிதி றோட்டேறியன் எஸ். கீதாஞ்சலி, தமிழ் செய்தி தகவல் மையத்தின் போசகர் கணநாதனிடம் உபகரணங்களை கையளிப்பதைப் படத்தில் காணலாம் (எ)



கடந்த பெப்ரவரி மாதம் களவாடப்பட்ட கடை ஒன்றின் உரிமையாளருக்கு செலிங்கோ காப்புறுதி நிறுவனம் ஆறுலட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்கியது. நஷ்டஈடு காசோலைக் கொடுப்பனவை வழங்கும் நிகழ்வு அண்மையில் செலிங்கோ காப்புறுதியின் யாழ். கிளையின் நடைபெற்றது. இதில் கிளையின் முகாமையாளர் சே.தவசீலன் நஷ்டஈடு காசோலையை கடை உரிமையாளர் சி. கிங்ஸ்ரன் றமேஷிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் காப்புறுதி நிறுவன ஊழியர்களும் காணப்படுகின்றனர். (13)



வடக்கு-கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ், பிரான்பற்றில் ஆரம்பிக்கப்பட்ட இலவச ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைப் பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி நாடாவை வெட்டி மருந்தகத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். வலி .தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரி ஞா. தேவச்சந்திரன், மருந்தகத்தின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி கிரிஜா சிறிதரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)




திவி செவண மானிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டையில் வீடமைப்புக்குத் தெரிவுசெய்யப்பட்ட குடும்பதலைவி ஒருவருக்கு யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் காணப்படுகின்றனர். (படம்: நவாலிச் செய்தியாளர்)



வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் கோப்பாய் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்ட தையல் மனையியல் கண்காட்சியை செயலக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வே. வீரபத்திரபிள்ளை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வலி. கிழக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி. அ.சாந்தசீலன், மாவட்ட கிராம உத்தியோகத்தர் நா. தியாகமூர்த்தி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: வலி. கிழக்கு செய்தியாளர்)



குருநகர் தூய விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் குருநகர் புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் அண்மையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. விளையாட்டுக் கழகத்தினரின் உறுப்பினர் ஒருவரிடமிருந்து இரத்தம் பெறப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: குருநகர் செய்தியாளர் )




பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகர்ப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கே.பி.எம். ஜீ.கிராம வீடமைப்புத் திட்டத்தில், ஹற்றன் நஷனல் வங்கியினால் பொது நூலகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை வங்கியின் பிரதான முகாமையாளர் தியாகராசா நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)




ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் இணைந்து கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் ஒவ்வொரு மாணவருக்குமான கல்வித் திட்டம் சார்பாக இடம் பெற்ற வரவுக் குழுக்களுக்கான பயிற்சிப்பட்டறையில் எடுக்கப்பட்ட படம் இது - நிகழ்வில் சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி ச. கனகரத்தினம் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவன அதிகாரிகள், கல்வி வலய அதிகாரிகள் அமர்ந்துள்ளனர். (202)



வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் சி. குலராசா, வடமாகாண இணைப்பாளர் இ.கி. இராசக்கோன், வவுனியா மாவட்ட சங்கத் தலைவர் சு. மகேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம் வலி. தென்மேற்கு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடா முயற்சியே சாதனைகளைக் குவிக்கும்!



2004ஆம் ஆண்டு வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் மக்கள் வங்கியின் சிசு உதான குலசபிரமாண புலமைப் பரிசி லுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் கலைப்பிரிவு (2007) மாணவனான சிவலோகநாதன் ஜனகன் முத்துக்குமாரு.

கல்வித்துறையுடன் இசைத்துறையிலும் பல படிநிலைகளைத் தாண்டி தேசிய மட்டம்வரை சென்று சாதனை நிலை நாட்டியுள்ளார் இந்த மாணவன். அவரது கல்வி மற்றும் இசைத்துறை முயற்சிகள் குறித்து அவர் வழங்கிய செவ்வி இது.

**✱ க.பொ.த. சாதாரணதரத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் வங்கியின் சிசுஉதான குலச பிரணாம புலமைப் பரில் கிடைத்தமை பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?**

✱✱ மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது: க.பொ.சாதாரணதரத்தில் யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதல் மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டமை என்பது, உண்மையிலே மிக்க மகிழ்ச்சியான விடயம். ஏதோ ஒன்றைச் சாதித்து விட்டதாகவே நான் உணர்கின்றேன். நான் இந்த மக்கள் வங்கியின் புலமைப்பரிசிலைப் பெற எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவருக்குமே இந்நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**✱ இச் சாதனைக்காக நீர் செய்த முயற்சிகள் என்ற எவற்றைக் குறிப்பிடுகின்றீர்?**

✱✱ கல்வியை விரும்பிக் கற்றமையும் உயர் பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்பதற்காக கற்ற விடயங்களைத் திரும்பத் திரும்ப மீட்டுப் பார்த்தல், குறிப்பிட்ட ஒரு பாட அலகில் மீண்டும் மீண்டும் குறிப்பெடுத்து கற்றல், அர்ப்பணிப்புடனும் ஏதாவது ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்ற உள் உணர்வின் உந்துதலூடான கல்விசார் முயற்சிகளே நான் இன்று இப்புலமைப்பரிசிலை பெறக் காரணம் என நினைக்கின்றேன். இதுதவிர, பெற்றோரது ஆலோசனைகளும் கல்வி கற்பித்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய வழிகாட்டலும், இது தவிர பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர்கள், உறவினர்களினது ஆசிகளும் இறைவனின் கருணையுமே இதற்குக் காரணம் என நினைக்கின்றேன்.

**✱ உமது கல்வி உயர்வுக்கு பாடசாலை ஆற்றிய பங்கு பற்றி என்ன கூறுகிறீர்...?**

✱✱ எனது முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணங்களில் மிக முக்கியமானதாகவே என் பாடசாலையின் பங்கைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு அன்று கல்வி கற்பித்த ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டல்களை நான் என்றும் மறக்கமுடியாது. அவர்கள் கல்விகற்பித்த முறையும் மாணவர் மனதில் அவை ஆழமாகப் பதிந்திருக்கின்றனவா என பரீட்சிக்கும் முறையும் பின்னூட்டல்களுமே நான் இன்று இப்புலமைப்பரிசிலைப் பெற வழி செய்தது என நினைக்கின்றேன். இது தவிர, எனது மதிப்பிற்குரிய அதிபர், உப அதிபர்களின் வழிநடத்தலும் அவர்கள் கூறிய நல்லறிவுகளும் காரணமாகும்.

**✱ உமது கல்விக்கு பெற்றோர் ஆற்றிய பங்கு என நீர் எவற்றைக் கூறுகின்றீர்?**

✱✱ உண்மையிலே எனக்குக் கிடைத்த இந்தப் புலமைப்பரிசில் எனக்குக் கிடைத்தது எனக் கூறுவதை விட என் பெற்றோருக்கு கிடைத்தது என்றே கூறவேண்டும். ஏனெனில், நான் இவ்வளவு சிறப்பாகக் கற்று இன்று சாதனை நிலைநாட்டியுள்ளேன் என்றால் அதற்கு மூலகாரணமே என் பெற்றோர்தான். அவர்கள்

## கல்வி மற்றும் இசைத்துறையில் பிரகாசிக்கும் மாணவனின் செவ்வி

என் கல்விக்கு செய்த உதவிகளை என்னால் ஒரு போதுமே நினைக்காது இருக்கமுடியாது. அவர்கள் தந்த ஊக்கமும் சிறந்த வழிநடத்தலுமே இதற்குக் காரணம் என நினைக்கின்றேன்.

**✱ நீர் சென்ற வருடம் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் தனி இசைப்பிரிவு 5 இல் தேசிய மட்டப் பரிசினை வென்றுள்ளீர். இந்தச் சாதனை பற்றி நீர் கூறவிரும்புபவை எவை?**

✱✱ கடந்த வருடம் தேசிய மட்டம் சென்றமையும் ஒரு புதிய அனுபவம் என்றே கூறவேண்டும். அதற்கு என்னை ஆயத்தம் செய்தவர் என்ற வகையில் எனது சங்கீத குரு திருமதி நா.மகாலிங்கம் அவர்களுக்கு என்றுமே நான் கடமைப்பட்டவன். இரவு, பகல் பாராது எனக்குக் கல்வி புகட்டியவர். உண்மையிலேயே நான் அவருக்கு மிகவும் நன்றியுடையவனாவேன். அது தவிர, எனது தாயாரின் பங்களிப்பும் எனக்கு அப்பரிசைப்பெற ஆதாரமாய் இருந்தது. அவருடைய உதவியை நான் ஒருபோதும் குறிப்பிடாது இருக்க முடியாது.

**✱ உமது கர்நாடக சங்கீதம் சார் சாதனைகளாகவும் அவற்றை ஊக்குவித்தவர்கள் என்ற ரீதியில் நீர் கூற விரும்புபவை?**

✱✱ நான் கர்நாடக சங்கீதத்தைப் பொறுத்தவரை வட இலங்கை சங்கீத சபையின் முதலாவது தர பரீட்சையை என்னுடைய ஏழாவது வயதில் மேற்கொண்டேன். தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் தரங்களையும் திருமதி சிவானந்தம் அவர்களிடமே கற்றேன். பின் எனது 12ஆவது வயதில் நான் காம் தரப் பரீட்சைக்குத் தோற்றி முதலாம் தர சித்திபெற்றேன். எனது நான்காம் தரத்தை நான் திருமதி நா.மகாலிங்கம் அவர்களிடமே பயின்றேன். இன்றும் தொடர்ந்து பயின்றும் வருகிறேன். பின் ஐந்தாம் தரப் பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தம் செய்தபோது வயது போதாது க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய பின்னரே தோற்றலாம் என்று கூறியதால் அதுவரை பொறுத்திருந்தபோதும் பல பண்ணிசைப் போட்டிகளிலும் பல பாடசாலைகள் குறிப்பாக கொழும்பு சென்.தோமஸ் கல்லூரி ஏற்பாடு செய்த தனி இசைப் போட்டியிலும் பங்குபற்றி முதலாம் பரிசிலைப் பெற்றுள்ளேன். தொடர்ந்து இசை பயின்றுவருகின்றேன். இவற்றுக்கு எனது பாடசாலை சங்கீத ஆசான் சங்கீத பூஷணம் சி.சிவஞ்ஞானசேகரம் ஐயா அவர்களும் மிக மிக ஆக்கமும் ஊக்கமும் தருவது குறிப்பிடத்தக்கதே.



இசை நிகழ்ச்சி ஒன்றில்...

**✱ உமது எதிர்கால இலட்சியம் என்ன?**

✱✱ ஒரு சட்டவிரிவுரையாளராக வரவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம். ஏனெனில், ஓர் ஆசானால்தான் பல தரப்பினரையும் காணமுடியும். உருவாக்க முடியும். அவர்கள் அனைரையும் வழிப்படுத்த முடியும். அந்தவகையிலேயே நான் கலைத்துறையைத் தெரிவுசெய்து கற்றுவருகிறேன். இதன் மூலமாக ஒரு சிறந்த சட்ட விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்.




**✱ இன்று கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நீர் கூறும் அறிவுரை?**

✱✱ படித்ததை மீட்டுப்பார்த்தலும் மீண்டும் மீண்டும் குறிப்பெடுத்துப் படித்தலுமே ஒரு பாட அலகில் நாம் கூர்மை அடைவதற்கு ஒரே வழி. இது தவிர பெற்றோர் பெரியோரை பணிதலும் அவர்களது ஆசியுமே எமது கல்வியை ஊக்குவிக்கவும் உயர்த்தவும் வல்லது. எதனையும் சோம்பலுடன் பிற்போடாது உடனே படிக்க வேண்டும். ஊக்கமும் முயற்சியும் கல்வி மீது ஆசையும் உண்டாக்கப் பெறின் கல்வியில் வீழ்ச்சி என்பதே கிடையாது. இதுவே நான் கண்ட உண்மை.

# இலங்கையில் தொடரும் யுத்தத்தை தடுக்க தெற்காசிய நாடுகள் தலையிடுவது அவசியம்

## சிங்கப்பூர் அறிஞர் கருத்து

புதுடில்லி, ஏப். 25

இலங்கையில்புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு முடிவு கட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் கூடிய தெற்காசிய நாடுகளின் தலையீடு அவசியம் என்று சிங்கப்பூரிலுள்ள தென்கிழக்கு ஆசிய கற்கைகளுக்கான நிலையப் பிரமுகரும், அறிஞருமான மைக்கேல் வைற்றிசிலியோட்டிஷ் யோசனை தெரிவித்திருக்கிறார்.

'ஹெரால்ட் ட்ரிபியூன்' என்ற சர்வதேச சஞ்சிகையில் எழுதியுள்ள திறனாய்வுக் கட்டுரையிலேயே இந்த யோசனையை அவர் வெளியிட்டிருக்கிறார்.

அந்தக் கட்டுரையில் அவர் மேலும் கூறியதாவது:-

''பேச்சுமேசைக்கு இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் பலாத்கார அச்சுறுத்தலைக் காட்டி போக வைக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் அழுத்தமே அவர்கள் இரு சாராரையும் பேச்சில் ஈடுபடவும்வைக்கும்.

''இரு தரப்பார் மீதும் இதற்கான அழுத்தத்தைக் கொடுக்கும் நல்ல வாய்ப்பான இடத்திலேயே இந்தியா இருக்கின்றது. ஆனாலும், பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நோர்வேயின் அனுசரணையிலான சமாதான முன்னெடுப்புக்கு அமைதியான ஆதரவைத் தருவதுவே அதன் விருப்பமாகவும் இருந்துவருகிறது.

''இலங்கையில் மூண்டுள்ள யுத்தத் துக்கு முடிவு கட்டுவதற்கு, மேலும் கூடுதல் ஒத்துழைப்புகளை வழங்குமாறு தெற்காசிய நாடுகளை தெற்காசியாவிலுள்ள நன்கொடை நாடுகளும் வேறு மூலோபாய உதவிகளை வழங்கும் நட்பு அணிகளும் குறிப்பிட்ட இந்தப் பிராந்தியத்துக்குள் நுழைவதற்கான தமக்குள்ள வழியை பயன்படுத்தி மேலும் தூண்டி உற்சாகப்படுத்த வேண்டும்.

'சார்க்' என்ற தெற்காசியப் பிராந்திய சங்க அமைப்பில் அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கி சங்கத்தில் சேர்த்து விடுகிறார்கள். இந்த அனுமதியானது, தனது நாட்டின் விளிம்பின் கெட்டியாகவும், உறுதிப்பாடுடனும் இல்லாதிருப்பது இந்தியாவுக்கு நெருடுதலைக் கொடுக்கக் கூடியதே!

''வளரும் பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலில் புலிகளைச் சேர்த்திருப்பதால் எதுவித பயனும் கிட்டப் போவதில்லை.

''இதேபோலவே படிப்படியாக புலிகளைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளோ, ஐரோப்பா ஆகியவற்றில் இப்பொழுது கொண்டு வரப்பட்ட தடைகளோ, அமெரிக்காவில் கொண்டு வரப்பட்ட தடைகளோ கூட உதவவில்லை.

''மேலும் கூடுதலான நெருக்குவாரங்களைக் கொடுப்பதன் மூலம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடக்கும்படி இரு சாராரையும் நிர்ப்பந்திக்கலாம். இதன் பின்னர் சகலருக்கும் ஏற்புடைய சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நோக்கிய பேச்சை மேற்கொள்ளலாம்.

''ஸ்தம்பித்துப்போயிருக்கும் சமாதான முன்னெடுப்புக்கு புத்துயிரளிப்பதற்கு நோர்வே அனுசரணையாளர்கள் தீரமுடன் செயற்பட்டு வருகிறார்கள். ஆனாலும், வேறு இடங்களிலிருந்து அவர்களுக்கு மிக அருமையாகவே உதவிகள் கிடைக்கின்றன.

''புலிகளும், அரசும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் யாரும் பேச்சில் நாட்டம் காட்டுகிறார்கள் இல்லை என்று பழி சுமத்திக்கொண்டே இருக்கும் அதே நேரத்தில், முழு அளவிலான யுத்தம் ஒன்று நாட்டி[illegible] கூடவே இருந்து வ[illegible]

''இரு தரப்பாரும் பேச்சுக்கு வருவதற்கு தயக்கம் காட்டுவதே இன்றுள்ள பாரிய பிரச்சினை.

''விடுதலைப் புலிகள் பலம் மிக்கவர்கள். அவர்களது கட்டுப்பாட்டில் பிரதேசங்கள் இருக்கின்றன. அவர்களிடம் மதிப்பிடத்தக்க இராணுவ பலமும் உண்டு. எனவே, அவர்கள் போராட்டத்தை விட்டு தூரப் போய்விட்டார்கள்.

''இலங்கை அரசைப் பொறுத்த மட்டில் இரு வழிப்பாதையே அதனுடையது. விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவதையே குறியாகக் கொண்டிருக்கிறது.''

- எனத் தெரிவித்துள்ளார். (க)

# பாணந்துறை குரணப் பகுதியில் இளைஞர் துப்பாக்கி சூட்டுக்கு பலி

பாணந்துறைப் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட குரணப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பாணந்துறை குரணப் பகுதியில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மிலான் என்னும் இளைஞரே கொல்லப்பட்டவராவார். பாணந்துறைப் பகுதியில் சிங்கள, தமிழ்ப் புதுவருடத்தை முன்னிட்டு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே இவர் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் சுடப்பட்டார். இதேவேளை, சுடப்பட்ட இளைஞருடன் சென்ற நண்பர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என்று பாணந்துறைப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# வந்தாறுமூலைப் பகுதியில் ஆயுதமுனையில் கொள்ளை

ஏறாவூர், ஏப். 25

ஏறாவூர் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட வந்தாறுமூலைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு வீடுகள் கடந்த சனிக்கிழமை இரவு ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பயஸ் ரமேஸ்குமார் மற்றும் கணபதிப்பிள்ளை புவனேந்திரன் ஆகியோர் ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவதினம் இரவு தூங்கிக்கொண்டிருந்தபோது வீட்டாரை எழுப்பிய இனம்தெரியாத நபர்கள் ஆயுதங்களைக்காட்டி பயமுறுத்திவிட்டு வீட்டிலிருந்த தங்க நகைகள் மற்றும் ஒரு தொகைப்பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச்சென்றுள்ளனர்.

இதேவேளை ஏறாவூர் - கம்மின்குடா பிரதேசத்தைச் சேர்ந்த சாபுத்தம்பி - கபீர் என்பவரது [illegible] சனிக்கிழமை இரவு முகமூடியணிந்த கொள்ளையர்களினால் அபகரித்துச்செல்லப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கொள்ளையர்கள் கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் திட்டமிட்ட கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. கொள்ளையர்கள் தொ[illegible]பான தகவல்களைத் தமக்கு வழங்கியுதவுமாறு பொலீஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இரவு வேளையில் பொலீஸ் ரோந்துச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறுவிளம்பரங்கள்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ்நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பரப்புக் காணியுடன் ஒரு மாடிக் கடைக் கட்டடம் (முன்புறம், பின்புறம் பாதைகள் கொண்டது) தொடர்பு: T.P.: 0713056177 (சி/49032)

### வீடு விற்பனைக்கு

சங்கானையில் பழைய தபாற் கந்தோர் வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.கணேசநாதன், 192, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (49740)

### தவறிவிட்டது

புகையிரத வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை விநாயகமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை (590262200V), சாரதி அனுமதிப்பத்திரம், விசேட அடையாள அட்டை மற்றும முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 13.04.2006 அன்று கொடிகாமத்திற்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஷபாஸ் ஸ்ரூடியோ, 51-53 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் அல்லது AVM போட்டோ, கண்டிவீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ரூபா 2000/- சன்மானம் வழங்கப்படும். T.P.No. 0776146436. (49751)

முனைத்தீவு, மிலேனியம் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியை உடைய நாகலிங்கம் துரசங்கர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை யாழ்.நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 224/47, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (49752)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், விசாக நட்சத்திரம் 7இல் செவ்வாயுள்ள 1969 ஆம் ஆண்டு பிறந்த ஆசிரியை மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2861, மே/பா உதயன். (49758)

### சிறுகதை எழுதுவது எப்படி?

பத்துச் சிறுகதைகளும் 13 கட்டுரைகளும் கொண்ட நூல், எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. படித்தால் சிறுகதையுடன் மேடை நாடகம், வானொலி நாடகமும் எழுதலாம். (49753)


**மலிவு விலையில்**
**VNC கொங்கிறீற் கற்கள்**

100 அடி நீளம் 60 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் கொங்கிறீற் கற்கள் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிடப்பட்டு விற்பனையாகின்றன. நா.கோ.மண், கச்சாய் மண் ½", ¾" சல்லிக்கல் கலக்கப்பட்டு அறுக்கப்பட்ட கல்லின் விலை 29/=, ஒரு பைக்கற் சிமெந்தில் 1 அடி நீள 4" அகல கல்லின் எண்ணிக்கை 55-60 வரை மற்றும் 1அடி நீள 5" அகல கிணற்று வளைவு கல் 39/= 1பைக்கற் சீமெந்தில் கல்லின் எண்ணிக்கை 45-50 வரை. இவற்றுடன் கடற்கரை உப்புக் காற்றை எதிர்க்கக்கூடிய கொங்கிறீற் கற்கள் - பூங்கன்று பாத்திகள், தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கக் கூடிய 1அடி நீள 3" அகல கொங்கிறீற் கல்லின் விலை 26/=.அலுமாரி பிளாற் (Flat) அமைப்பதற்கு ஏற்ப 1அடி நீள 2" அகல கல்லின் விலை 24/= இவற்றுடன் வேலித் தூண்கள், கொட்டில் தூண்கள் என்பனவும் மற்றும் உங்கள் விருப்பத்திற்கு அமைவான அனைத்து வகையான கொங்கிறீற் பொருள்களும் செய்து கொடுக்கப்படும். கற்கள் அறுக்கப்படுவதை காலை 7 மணி - பிற்பகல் 2 மணி வரை நேரடியாக பார்வையிட்டு முற்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்செல்லவும். தூர இடங்களுக்கான வாகன கட்டணத்தில் சலுகை வழங்கப் படும்.

**VNC கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் அருகில்**
அளவெட்டி மத்தி, அளவெட்டி
(49743) T.P. 077 3621328 (21.11.17)


## தண்ணீர் கொள்கலன் அன்பளிப்பு

குருநகர்,ஏப்.25

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியின் குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் தண்ணீர் கொள்கலன் ஒன்றை உலகதரிசன நிறுவனம் வழங்கியுள்ளதாக கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார். இந்நிறுவனத்திற்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-51)

## டெங்கு வாரம்; வலி.மேற்கில் - சிரமதானம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் டெங்கு தடுப்பு நடவடிக்கை வாரத்தையொட்டி வீதிகளையும் பொது இடங்களையும் சிரமதானத்தின் மூலம் திருத்தியமைக்கவுள்ளனர்.

மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் சமூக மட்ட அமைப்புகளுடன் இணைந்து கிராமங்களிலுள்ள பொது இடங்களிலும் வீதிகளிலும் உள்ள குப்பை கூழங்களை அகற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையொட்டியே இந்தச் சிரமதான வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (ஒ-175)

## மாணவர்கள் நலன்பேண நிதியுதவி

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கைதடியைச் சேர்ந்த மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக கைதடி மேம்பாட்டு ஒன்றியத்தின் சுவிஸ் கிளை ரூபா ஒரு லட்சத்தை கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்திடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரடியாக அன்பளிப்புச் செய்துள்ளது.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெ ற விழாவில் கைதடி மேம்பாட்டு ஒன்றியத்தின் சுவிஸ் பிரதிநிதி சி.புலேந்திரன் மேற்படி நிதியை கழகப் பொருளாளர் க.தயாளனிடம் அன்பளிப்பாக வழங்கினார். (ஒ-75)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

**இலங்கை வங்கி**
**பகிரங்க ஏல விற்பனை**
**அறிவித்தல்**

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2005ஆம் திகதி அடகு வைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்றரக் கிளையில் சித்திரை மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை
- யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி),
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

**இந்த நகைகள் மீட்கப்பட வேண்டிய கடைசித் திகதி 28.04.2006**

அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**உதவிப் பொது முகாமையாளர்**
(வடபிராந்தியம் - யாழ்ப்பாணம்)
(சி-48992)(21.11.17)


## நெஞ்சை விட்டகலா 6ஆம் ஆண்டு

அமரர்
**க.அன்ரனி பேர்னாண்டோ**
*(இளைப்பாறிய உப அதிபர்)*



மலர்வு 27.07.1932 உதிர்வு 25.04.2000

பாசமிகு தந்தையாகவும் வழிகாட்டும் ஆசானாகவும் நேசமுடன் எம்மையெல்லாம் அணைத்திட்ட அன்புப் பப்பா! நீங்கள் எம்மை விட்டு 6 ஆண்டுகள் ஆனாலும் ஆறாது எம் துயரம். எத்தனை ஜென்மம்எடுத்தாலும் தீர்க்க முடியாதப்பா, நீங்கள் எங்களுக்கு செய்திட்ட தியாகங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

ஆர்க் லேன்,
உடுவில். (49744)(21.11.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**சின்னப்பு ஆசைப்பிள்ளை**



அன்னை மடியில் 25.07.1925 ஆண்டவன் அடியில் 26.03.2006

திங்கள் ஒன்று போனதைய்யா, திகைப்பாகவே இருக்கிறது
நீங்காத நினைவுகளாய் எம் நெஞ்சில் நீங்கள்
இறைகழல்தான் சேர்ந்தீர்களோ ஐயா? அந்த
இறைவனையே துதிக்கின்றோம் உங்கள் சாந்திக்காய்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அற்புதநர்த்தன விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (25.04.2006) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(49747) (89.21.11.17)

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 03 . 05 . 1918 உதிர்வு 16 . 04 . 2004



*நீர்வேலி*
**கதிரவேலு தங்கம்மா**
*திதி: திரயோதசி (25.04.2006)*

வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழி சமைத்த எம் தெய்வமே!
ஆண்டு இரண்டு உருண்டதம்மா
அழியாது உன் நினைவு
ஆத்மா சாந்தியடைய நீர்வை
முருகனைப் பிரார்த்திக்கின்றோம்!

459, கே.கே.எஸ்.வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

*பிரிவால் துயருறும்:*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(49746) (89.11.81)

## மரண அறிவித்தல்

**கதிரவேலு கந்தசாமி** (கண்டி ஐயா)
(முன்னாள் ஆசிரியர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தசாமி அவர்கள் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வரச்செல்வம், பூபாலசிங்கம், குணரெட்ணம், பாலகுனேஸ்வரி, பாலசுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2006) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல்10.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.குணரெட்ணம்**
யா.ப.கூ.ச. வெதுப்பகம்
வஸ்தியன் சந்தி,சுண்டுக்குளி.

வில்வந்தெரு லேன்,
புங்கன்குளம், அரியாலை.
T.P.No. 0776032170, 0779205420 (49748)(21.11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜெஸீரா தொலைக்காட்சியில் பின்லேடன் மீண்டும் தோன்றினார்



லண்டன்,ஏப்.25

அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பின்லேடனின் குரலில் பதிவான ஒலி-ஒளி நாடாவொன்று மீண்டும் அரேபிய தொலைக்காட்சி ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒஸாமா பின்லேடனின் உருவப் படத்துடன் ஒளிபரப்பான அந்தத் தொலைக்காட்சியில் சூடானிலும் இதர இஸ்லாமிய நாடுகளிலும் இடம்பெற்றுவரும் போராட்டங்களை இஸ்லாமிய புனித போராக பின்லேடன் வர்ணித்துள்ளார்.

ஜனவரி மாதத்துக்குப் பிறகு பின்லேடனின் குரல் வெளிப்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். பின்லேடனின் கருத்தை சூடானும் ஹமாஸ் அமைப்பும் உடனடியாகவே நிராகரித்துள்ளன.

அல்கெய்டா தலைவரின் குரல்தான் ஒலி நாடாவில் ஒலித்தது என்பதை அமெரிக்க புலனாய்வாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். பின்லேடன் தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார் என்பதற்கு இது சான்று பகர்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புஷ் நிர்வாகத்தினால் பின்லேடனைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது என்பதை இது காட்டுகிறது என்று அமெரிக்க எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கிண்டல் செய்துள்ளார்கள்.

உலகின் மிகப்பெரிய மனித வேட்டை தோல்வியில் முடிந்துள்ளது என்று ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஜேன் ஹார்மன் கூறினார்.

அரேபிய தொலைக்காட்சி நிறுவனமான அல் ஜெஸீராவில் பின்லேடனின் ஒலி - ஒளி நாடா ஒளிபரப்பப்பட்டது.

நயோனிஸவாதிகளும் கிறிஸ்தவர்களும் இஸ்லாத்துக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிறார்கள் என்று கூறிய பின்லேடன், கிறிஸ்தவ கொள்ளைக்காரர்களுக்கு எதிராக நீண்டகால யுத்தத்திற்கு தயாராகும்படி இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கேட்டுக் கொண்டார்.

(ப)(22)

## பிரசாரத்தில் நடிகர் சிம்பு

சென்னை,ஏப்.25

லட்சிய தி.மு.க நிறுவுநரும் திரைப்பட நடிகருமான விஜய டி ராஜேந்தருக்கு ஆதரவாக அவர் போட்டியிடும் மயிலாடுதுறை தொகுதியில் அவருடைய மகன் நடிகர் சிம்பு தேர்தல் பிரசாரம் செய்கிறார்.

லட்சிய தி.மு.க. 9 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுகிறது. மீதி தொகுதிகளில் தி.மு.கவை ஆதரிக்கிறது.

தி.மு.க.வுக்கு ஆதரவாக விஜய ராஜேந்தர் பிரசாரமும் செய்கிறார்.

விஜய ராஜேந்தருக்கு ஆதரவாக அவருடைய மகனும் நடிகருமான சிம்பு மயிலாடுதுறையில் பிரசாரம் செய்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-202) (22)

உலக அரங்கில்

# நேபாள கிராமப் பகுதிகளில் மாவோவாதிகள் ஆக்கிரமிப்பு

## முக்கிய கிராமம் மீது பெரும் தாக்குதல்

காத்மண்டு,ஏப்.25

நேபாளத்தின் கிராமப் பகுதிகள் பலவற்றில் மாவோ தீவிரவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள்.

காத்மண்டுவுக்கு 100 கி.மீ. தூரத்திலுள்ள சந்த்தாரா என்ற நகரின்மீது தீவிரவாதிகள் தாக்குதல் ஆரம்பித்துள்ளார்கள்.

இந்நகரின் மீது புரட்சிவாதிகள் ஆக்கிரமித்து அரச காரியாலயங்களின் மீது தாக்குதல் நடத்தினார்கள். காரி யாலயங்கள் மீதும் ஓர் சிறைக்கூடம் மீதும் ஆறு மணிநேரம் தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் கூறினார்கள்.

அந்நகரத்துடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுவிட்டன. காயமுற்றவர்கள் பற்றிய விவரம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

காத்மண்டுவில் புதிதாக ஊரடங்கு அமுலுக்கு வந்துள்ளது. அடுத்த பெரும் ஆர்ப்பாட்டம் இன்று நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவோ வாதிகள் தாக்குதல் ஆரம்பித்துள்ள பகுதிக்கு மேலதிக படைகளையும் ஹெலிகொப்டர் உதவிகளையும் அனுப்புமாறு அதிகாரிகள் கோரியுள்ளனர். அப்பகுதி, மாவோ வாதிகளின் கேந்திரப்பகுதி என்று கருதப்படுகின்றது.

10 வருடகால மாவோ போராட்டத்தில் இதுவரை 13 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

(ப)

# அரச மருத்துவமனையின் அவலம்

மும்பை,ஏப்.25

மும்பை நகரில் பிரபல அரசு மருத்துவமனையில் பணி செய்யும் 57 மருத்துவர்கள் கூண்டோடு, வாந்திபேதி, காய்ச்சலுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மும்பையில் பிரபல அரசு மருத்துவமனை, ஜே.ஜே. மருத்துமவனை, இங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மருத்துவமனை விடுதியில்தான் தங்கியிருக்கின்றனர்.

சமீபத்தில் ஒருவர் மாறி ஒருவராக மருத்துவர்கள் வாந்தி,பேதியால் பாதிக்கப்பட்டனர். 'சிலருக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. இதுவரை 57 பேர், மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களாக தண்ணீர் தாங்கிகள் சுத்தம் செய்யப்படவில்லை. அதனால், அதில் பூச்சிகள் கலந்தும், அசுத்தமாகியதே மருத்துவர்கள் பாதிக்கப்பட்டதற்கு காரணம் என்று கூறப்பட்டது.

இதனையடுத்து தண்ணீர் தாங்கிகள் சுத்தம் செய்யப்பட்டன.

(ஒ-202) (22)

# சொந்தத் தம்பியால் சுடப்பட்ட மகாஜன் அபாயக் கட்டத்தைத் தாண்டவில்லை



மும்பை,ஏப்.25

சொந்தத் தம்பியால் சுடப்பட்டு மும்பை இந்துஜா மருத்துமனையில் சிகிச்சை பெற்றுவரும் பாரதீய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலாளர் பிரமோத்மகாஜனின் (வயது-56) உடல்நிலை சிறிது முன்னேற்றமடைந்துள்ளதாகவும், ஆனால், அவர் அபாயக்கட்டத்தைத் தாண்டவில்லை என்றும் - மருத்துவர்கள் நேற்றுக்காலை கூறினார்கள்.

பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் பிரமோத் மகாஜன் சொத்துத் தகராறு காரணமாக அவரது வீட்டில் வைத்து சொந்தத் தம்பியால் சுடப்பட்டார். படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மகாஜன் சுடப்பட்ட 24 மணி நேரத்துக்குப் பின் அவரது உடல் நிலையில் சொற்ப அளவில் முன்னேற்றம் தெரிகிறது. கைகளை லேசாக அசைக்க ஆரம்பித்துள்ளார். இருப்பினும் அவரது சிறுநீரகத்தின் செயற்பாடு மோசமாக இருக்கிறது. கல்லீரல் ரத்தக் கசிவு ஓரளவு குறைய ஆரம்பித்துள்ளது. இருந்தாலும் அபாயக் கட்டத்தை அவர் தாண்டவில்லை என அவருக்கு சிகிச்சை அளித்துவரும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மகாஜன் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட அவரது தம்பி பிரவீன் மகாஜனை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை பொலீஸ் காவலில் வைத்து விசாரிக்க மும்பை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

(ஒ-202)(30)

# இலவச ரீ.விக்கு கணக்கெடுப்பென பணத்தைச் சுருட்டிய எத்தர்கள்

சென்னை,ஏப்.25

தி.மு.க ஆட்சிக்கு வந்தால் அனைவருக்கும் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்படும் என்று கருணாநிதி வாக்குறுதி வழங்கினார் அல்லவா? இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிலர் வாக்காளர்களை ஏமாற்றிப் பணத்தைச் சுருட்டியுள்ளனர்.

தாம் ஆட்சிக்கு வந்தால் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் காஸ் அடுப்பு ஆகியவற்றை இலவசமாக வழங்குவதாகக் கூறி வந்த கருணாநிதி இதற்கான கணக்கெடுப்பை தி.மு.க. இப்போதே ஆரம்பித்துவிட்டதாகக் கடந்த வாரம் கூட்டம் ஒன்றில் கூறினார். ஆனால், இக்கணக்கெடுப்பு யாரால் எப்படி நடத்தப்படும் என்று அவர் விளக்கவில்லை.

இதனை வாய்ப்பாக கோயம்புத்தூரில் சிலர் பயன்படுத்தினர். அவர்கள் வீடு வீடாகச் சென்று இலவச தொலைக்காட்சிப் பெட்டிக்கு கணக்கெடுப்பவர்கள் என்று அறிமுகமாகினர். தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கட்சிச் சின்னம் அச்சிடப்பட்ட படிவங்களைக் கொடுத்து 'தேர்தலின் பின் தொலைக்காட்சிப் பெட்டி தேவையானால் படிவத்தை நிரப்பி முற்பணமாக நூறு ரூபா தருமாறு அவர்கள் கூறினர்.

இலவசத் தொலைக்காட்சிக்கு ஆசைப்பட்ட பலரும் படிவத்தை நிரப்பி பணத்துடன் கொடுத்தனர்.

இதனை தி.மு.க.வின் தேர்தல் விதிமுறை மீறலாக பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்ட பின்னரே தி.மு.க.வினருக்கு விடயம் தெரிந்தது.

(ஒ-202)(22)

# மௌனம் கலைந்தார் சு.சுவாமி கலகலப்பானது தேர்தல் களம்

தனது அதிரடிக் கருத்துக்களால் இந்திய அரசியலில் கலகலப்பை ஏற்படுத்துபவர் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தமிழக சட்டமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் அவர் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மலேசியாவில் காளியம்மன் கோயில் கடந்த 21ஆம் திகதி இடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி அந்நாட்டுப் பிரதமருடன் மன்மோகன் பேசவில்லை. ஒரு கண்டன அறிக்கையைக் கூட வெளியிடவில்லை. மதச்சார்பின்மை என்பது ஒரு வழிப்பாதையாக மட்டும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இருப்பதை ஜனதாக் கட்சி கண்டிக்கிறது.

ரே பரேலி தொகுதியில் போட்டியிடும் சோனியா, தன்னுடைய பெயரை நிரூபிக்கும் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். அவருடைய பெயர் ஆன்டோனியா மைனோ என்று இத்தாலியில் பதிவாகியுள்ளது. அந்தப் பெயரைச் சோனியா காந்தி என மாற்றியதற்கான சான்றிதழைத் தேர்தல் அதிகாரியிடம் அவர் சமர்ப்பிக்கவில்லை.

இது பற்றி புகார் கொடுக்க நான் ரே பரேலி சென்றபோது என்னை சிலர் தாக்க முயற்சித்தனர் சோனியாவின் வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்யக் கோரி தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் அனுப்பி இருக்கின்றேன். தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்காவிட்டால் தேர்தல் முடிந்தபிறகு சோனியாவுக்கு எதிராக வழக்கு தொடருவேன் என்றார் சுப்பிரமணிய சுவாமி.

(ஒ-202) (30)

# வீரப்பன் மனைவியும் தேர்தலில் போட்டி



சேலம்,ஏப்.25

சந்தன கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிடுகிறார். தி.மு.க. வேட்பாளர் பெரியண்ணனை எதிர்த்து அவர் களத்தில் நிற்கிறார்.

அவரை போட்டியில் இருந்து விலகுமாறு பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டார். அவரது கோரிக்கையை நிராகரித்த முத்துலட்சுமி போட்டி உறுதி என்று அறிவித்தார். அவர் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

பெண்ணாகரம் தொகுதியில் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து வாக்கு சேகரித்துள்ளேன். செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் சிறப்பாக வரவேற்பு கொடுக்கிறார்கள்.

பெண்ணாகரம் தொகுதியில் எனது வெற்றி உறுதியாகிவிட்டது. மக்களை சார்ந்து இருக்கும் என்னை மக்கள் ஜெயிக்க வைப்பார்கள்.

என் கணவர் (வீரப்பன்) மக்கள் மீது அன்பு வைத்திருந்தார். தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார். இதை மக்கள் அறிவார்கள்.

நான் எந்தக் கட்சியிலும் சேரவில்லை. எனக்கு பதவி ஆசை, பண ஆசை கிடையாது சமுதாய முன்னேற்றத்துக்கு பாடுபடுபவர்களில் நானும் ஒருவராக உள்ளேன். நான் வெற்றிபெற்றால் சாலை வசதி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பேன் என்றார்.

(22)




# பெருநாட்டில் எரிமலை சீற்றம்

லிமா (பெரு),ஏப்.25

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெருவில் உபநாஸ் என்ற மிகப்பெரிய எரிமலை உள்ளது. மொத்தம் 18 ஆயிரத்து 700 அடி உயரம் உள்ள இந்த எரிமலை, 1550ஆம் ஆண்டிலிருந்து 23 முறை வெடித்துள்ளது. என்றாலும் கடந்த 40 ஆண்டுகளாக அமைதியாக இருந்தது. ஆனால், சமீபகாலமாக இந்த எரிமலை மீண்டும் சீறத் தொடங்கியுள்ளது.

எரிமலைக் குழம்பு, புகை மற்றும் நச்சு வாயுக்களை அந்த எரிமலை கக்குகிறது. இதனால் அதன் அருகே குடியிருக்கும் பொது மக்கள் பெரும் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். எரிமலை அமைந்துள்ள உபநாஸ் மாவட்ட மக்கள் தங்களின் வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். பாதிப்பு ஏற்படும் என்று கருதப்படும் பெரு நாட்டின் தென்பகுதி நக ரங்களில் நெருக்கடி நிலை பிரகடனம் செய் யப்பட்டுள்ளது. ராணுவ வீரர்களின் உதவியு டன் அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் தங்களின் வீடுகளையும், கால்நடைகளையும் விவசாயம் செய்துள்ள விளைநிலங்களையும் விட்டு வெளியேற மனமில்லாமல் அங்கேயே தங்கிவருகின்றனர்.

ஒருசிலர் தங்களின் கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்றுவிட்டு அங்கிருந்து வெளியேறுகின்றனர். இவர்களுக்கு தேவையான உணவு, தற்காலிக குடியிருப்பு, மருத்துவம் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பெரு அரசு செய்துள்ளது.

(22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி என்ற பெயரில் பெண்களை நிர்வாணமாக படம் எடுக்கிறார்களாம்!

## அரசு சாரா நிறுவனங்கள் சிலவற்றின் பொட்டுக்கேடு அம்பலம்

கொழும்பு,ஏப்.25

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அரசசாரா அமைப்புகளில் பணி புரியும் இளம் பெண்களை வீடியோ படங்களில் நிர்வாணமாக காட்சி தரும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று புகார் எழுந்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களாலும் இவ்வாறாக இளம்பெண்கள் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படுவதாக அச்செய்தி கூறுகின்றது.

இந்த விடயம் மிக மோசமானதோர் நிலையை அடைந்திருப்பதன் காரணமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலரை உடனடியாக உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை அழைத்து இது பற்றி ஆராயும்படியும் நிலைமையை சீர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படியும் கோரியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இம்மாதிரியாகப் பெண்கள் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படும் செயற்பாடு சில காலமாகவே நடந்துவருவதாக தாம் கருதுவதாகத் தெரிவித்ததுடன் அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுவதை வரவேற்பதாகவும் கூறினார்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மாக்ஸி புறக்டர் கூறுகையில் பெண்கள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்படுவது குறித்து முறையான முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லையென்றும் ஆனால் அமைப்பு ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்களைப் பார்த்திருப்பதாகவும் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையது என்று கருதப்படும் அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் மேற்படி நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களை உடனடியாக பதவிகளிலிருந்து விலகிக் கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் கடந்த வெள்ளியன்று அரசசாரா அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்து தங்களிடம் இவ்விடயம் தொடர்பாக ஆதாரங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டதுடன் உடனடியாக இதனை நிறுத்தாவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.தங்கேஸ்வரி கூறுகையில்-

இந்த விடயம் குறித்து தாங்களும் உள்நாட்டு வெளிநாட்டு அரசு சாரா நிறுவனங்களுடன் தொடர்புகொண்டிருப்பதாகவும் இப்பிரதேசத்தில் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற விரும்பினால் உள்ளூர் மக்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருப்பதாகவும் கூறினார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான நாவலடி மற்றும் திருச்செந்தூர் ஆகிய பகுதிகளிலேயே பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பெண்கள் தூர இடங்களுக்கு பயிற்சிக்கென அழைத்துச் செல்லப்படுவதாகவும் அங்கு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பெரும்பாலும் ஹோட்டல்களில் ஒரு வார காலம் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகிறதென்றும் பெண் பணியாளர்கள் வீடியோ படங்களில் நிர்வாணமாக காட்சியளிக்க வற்புறுத்தப்பட்டு பணம் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த மாவட்டங்களில் பணிபுரியும் சுமார் 300 அரசு சாரா நிறுவனங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் பணி புரிகின்றார்கள். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் பெரும்பாலான இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்டவை.

இந்த நிலைமையால் பாதிக்கப்பட்ட சுமார் 75 பெண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொண்டவர் என்று கருதப்படும் ஒரு பெண் மருத்துவர் மூலமாக இந்த இரகசியம் வெளிவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இழிநிலைக்கு ஒரு முடிவு கட்டும் விதத்தில் அரசசாரா நிறுவனங்களில் பெண்களைப் பணிபுரியவேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளது. பணிபுரிபவர்கள் 5 மணிக்கு மேல் வேலைசெய்யவேண்டாம் என்றும் தூர இடங்களுக்குப் பயிற்சிக்குச் செல்லவேண்டாம் என்றும் - பிரதான காரியாலயங்களில் நடக்கும் பயிற்சி முகாம்களில் மட்டுமே கலந்துகொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அப்பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

(ப)(22)

# பேராசிரியர் மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பதவியை இனிமேல் ஏற்கப்போவதில்லை என்று உத்தரவாதக் கடிதம் எதனையும் மாணவர்களுக்கு தான் வழங்க வில்லை என்று பேராசிரியர் வி.பரமேஸ்வரன் உதயனுக்கு விளக்கமளித்துள்ளார்.

'பதில் துணைவேந்தர் பதவியிலிருந்து விலகினார் பேராசிரியர் பரமேஸ்வரன்' என்ற தலைப்பில் கடந்த 22ஆம் திகதி உதயனின் 14ஆம் பக்கத்தில் செய்தி வெளியாகியிருந்தது.

யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பதவியை கடந்த 17ஆம் திகதி பொறுப்பேற்ற பேராசிரியர் வி.பரமேஸ்வரன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்களின் நிலைமையை விளக்கியதையடுத்து பதவி விலகினார் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் பதில் துணைவேந்தர் பதவியை இனிமேல் ஏற்கமாட்டார் என்று அவர் மாணவர்களுக்கு கடிதம் மூலம் உத்தரவாதம் வழங்கினார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச்செய்தியில் குறிப்பிட்டபடி மாணவருக்கு உத்தரவாதக் கடிதம் எதனையும் வழங்கவில்லையென்று பேராசிரியர் மறுத்துள்ளார். (ஒ)

# யாழ்.வலய பாடசாலைகளிடையேயான வலைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயது, 17 வயது மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையேயான போட்டிகளில் முறையே திருக்குடும்பக் கன்னியர் மடம், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகளின் இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற 15 வயதுக்குட் பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதியாட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி விளையாடியது.

இதில் திருக்குடும்பக் கன்னியர் மடம் அணியினர் 10:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை வெற்றிகொண்டது. இதைத் தொடர்ந்து மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் இடம்பெற்றது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 12:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

17 வயது பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதியாட்டத்தில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதியது. வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினர் 23:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் திருக்குடும்பக் கன்னியர் மட அணியை வெள்ளிகொண்டது.

மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் ஆவரங்கால் நடராசா ம.வி. அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மோதியது. இதில் ஆவரங்கால் நடராசா ம.வி. அணி 15:14 என்ற புள்ளி அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வென்றது.

19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையேயான போட்டியின் இறுதி ஆட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 37:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் ம.வி. அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 27:23 என்ற புள்ளி அடிப்படையில் கனகரத்தினம் ம.வி. அணியை வெற்றி கொண்டனர். (ஒ-190)

# புதுவருட தின கரப்பந்தாட்டத்தில் உடுப்பிட்டி வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.25

புதுவருடத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை வேவில் ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே மின் ஒளியில் நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வல்வெட்டி வேவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரணி காந்தி விளையாட் டுக்கழக அணி மோதியது.

இதில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழக அணி 15:6, 2:15, 15:8 என்ற புள்ளி அடிப்படையில் ஊரணி காந்தி விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது.

இந்த நிகழ்விற்கு லயன் சச்சி தவச்செல்வன் கலந்துகொண்டார்.

(எ-190)

# புத்தாண்டு கிரிக்கெட் போட்டியில் இடைக்குறிச்சி அணி சம்பியன்

தென்மராட்சி கிழக்கு,ஏப்.25

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி வரணி இடைக்குறிச்சி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை வரணியில் நடத்தியது.

இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக்கழகமும் இடைக்குறிச்சி இளைஞர் விளையாட்டுக் கழமும் மோதின.

முதலிதலில் துடுப்பெடுத்தாடிய இடைக்குறிச்சி இளைஞர் விளையாட்டுக் கழகம் 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணித்தலைவர் யோ.றஜீவன் 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மாசேரி பாரதி விளையாட்டுக் கழகம் 15 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

இறுதி ஆட்டத்தில் சிறந்த ஆட்டக்காரராக இளைஞர் விளையாட்டுக் கழக வீரர் யோ.றஜீவன் தெரிவானார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இடைக்குறிச்சி கிராம அலுவலர் ந.ராஜகுமாரன் மற்றும் சிறப்பு விருந்தினராக வரணி தென் இந்திய திருச்சபை பிதா வண.யோ. துரைரத்தினம் மற்றும் கௌரவ விருந்தினராக இளைப்பாறிய வ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-122)

# ஊர்காவற்றுறையில் புத்தாண்டு தின விளையாட்டுப் போட்டி

குருநகர்,ஏப்.25

ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள புத்தாண்டு தின விளையாட்டுப் போட்டிகள் நாளை புதன் கிழமை ஊர்காவற்றுறையில் நடைபெறவுள்ளன.

அன்று காலை 7 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும் 8 மணிக்கு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இவற்றைத் தொடர்ந்து கயிறு இழுத்தல் போட்டி, விநோத உடைப் போட்டி வழுக்கு மரம் ஏறுதல் ஆகியவையும் நடைபெறவுள்ளன. (ஒ-51)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்

**வீரவாகு கனகசபாபதி**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
யாழ்/கொக்குவில் மேற்கு சி.மு.த.க.
பாடசாலை.

(49766)



## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**TVS VICTOR GLX, NPMBxxxx**

தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

138/1, நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.

T.P.No. 0779672436

(21.11)



## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 28.06.1977
உதிர்வு 06.05.2005

அமரர்
திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்

திதி:- அபரபக்க திரயோதசி

ஓராண்டு காலம்
எமை விட்டு மறைந்ததெப்போ
ஈர விழி காயவில்லை.
இதய அலை ஓயவில்லை

எத்தனையோ செல்வத்தை
எமக்களித்துச் சென்றாலும்
அத்தனைக்கும் மேலான
அன்புச் செல்வம் நீ எமக்கு
இத்தரைக்கும் இனி எமக்கு
ஈடான செல்வமுண்டோ?
இறைவனையே துதிக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தி பெற.

"சுதா பவனம்"
பாடசாலை ஒழுங்கை
தாவடி தெற்கு
கொக்குவில்.

பிரிவால் துயருற்றிருக்கும்
அன்புக் கணவர், அன்பு அப்பா, அம்மா,
மாமி, சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிமார், மருமக்கள்.

(49768)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட அரிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ -து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
### முழுப்பங்கு செலுத்தாத அங்கத்தவர்களுக்குரிய முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துப் பிரதேச மன்றுகளுக்குரிய நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுமையான பங்கு ஒன்றினைச் செலுத்தாத அங்கத்தவர்கள் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கவோ அல்லது வாக்களிக்கவோ உரிமையற்றவராவார்.

எனவே, முழுமையான பங்கு ஒன்றினைப் பெறத்தவறிய அங்கத்தவர்கள் மீதிப் பங்குப் பணத்தினை 31.05.2006 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

31.05.2006 ஆம் திகதியுடன் வாக்காளர் பட்டியல்முடிவுறுத்தப்படவுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

24.04.2006 (சி-49088) (18-34-49) செயலாளர்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இல:- 03/2006
தன்மை:- மண விலக்கு

வழக்காளி
வரதன் பிறிசில்டா,
ஜோய் கோட்டேஜ்,
தேவாலய வீதி,
சங்கானை.

எதிராளி
கணபதிப்பிள்ளை வரதன்,
7 பில் றூபா ரூவர் ஜேர்,
75019 பாரிஸ்,
பிரான்ஸ்.

மேற்படி எதிராளிக்கு!

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கின் எதிராளியானவர் இம்மன்றின் நியாயாதிக்க எல்லைக்கு அப்பால் வசித்து வருவதாலும் வழக்காளியுடன் எவ்விதமான தொடர்புமற்ற வகையில் வாழ்ந்து வருவதாலும் வழக்காளியால் எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்பாணை அனுப்பப்படாது மன்றின் கட்டளைக்கமைய இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது. இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் எதிராளியோ, அல்லது அவர் சார்பில் அக்கறை உடைய நபர்களோ, உரித்தானவர்களோ மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் வெளிப்படுத்தத் தவறின் இவ்வழக்கு குடியியல் நடவடிக்கைச் சட்டத்திற்கமைவாக ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்காளியின் உரிமைக் கோரிக்கைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

''மன்றின் கட்டளைப்படி''

வரைபு:-
சூ.அச்சுதன்,
வழக்காளி சட்டவாளர். (சி-49085) (18-34-49)

பொ.சுப்பிரமணியம்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பளை.

## தந்தை செல்வநாயகம்
## 29 ஆவது நினைவு நாள் நிகழ்ச்சி



**காலை நிகழ்ச்சி**
**மலரஞ்சலி**

காலம்: நாளை(26.04.2006) புதன்கிழமை முற்பகல் 9.30 மணி
இடம்: தந்தை செல்வா நினைவுத் தூபி - தந்தை செல்வா சதுக்கம், கோட்டை, யாழ்ப்பாணம்.

**மாலை நிகழ்ச்சி**
**நினைவுப் பேருரை**

நேரம்: பிற்பகல் 3.30 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
தலைமை: அருட்கலாநிதி க.ஜெபநேசன் (தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு)
நினைவுப் பேருரை : திரு. சத்திவேல் பாலகிருஷ்ணன் (அரசியல் விமர்சகர், இனமுரண்பாடு சமூகக்கொள்கை, அரச கொள்கை ஆய்வாளர்)
பொருள்: இலங்கையில் இன முரண்பாடுகளும் கடந்தகால, சமகால நிகழ்வுகள் எதிர்காலக்கண்ணோட்டமும்.

*அனைத்து நிகழ்வுகளுக்கும் அலையெனத் திரண்டு வாரீர்!*

(சி-49086) (18-34-49)
தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு.


வேல்ஸ் இளவரசி வைத்தியசாலை
24 மணி நேர சேவை

எமது மக்களின் நலன் கருதி பின்வரும் மருத்துவ நிபுணர்களின் சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- மகப்பேற்று மருத்துவ நிபுணர்
  பார்வையிடும் நேரம: ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் நண்பகல் 12.00 – 1.00 மணி வரை
- பொது வைத்திய நிபுணர்
  பார்வையிடும் நேரம: 24 மணி நேரமும
- முறிவு, நெரிவு வைத்திய நிபுணர்
  பார்வையிடும் நேரம: ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலை 4.00 – 6.00 மணிவரை
- ENT வைத்திய நிபுணர்
  பார்வையிடும் நேரம: தினமும் நண்பகல் 12.00–1.00 மணி வரை
- சரும ரோக வைத்திய நிபுணர்
  பார்வையிடும் நேரம: ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நண்பகல 12.00–1.00 மணி வரை
- இதய நோய் வைத்திய நிபுணர்
  பார்வையிடும் நேரம: தினமும் மாலை 6.00 – 8.00 மணிவரை

(49770) (18-34-49)



132, கச்சேரி நல்லூர் வதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 021 222 6179
தொலை நகல்: 021 222 6180


## மன்னாரில் தேடுதல்

மன்னார் பெரியகமம் நூறுவீட்டுத் திட்டப் பகுதியில் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து பெரும் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை நேற்றுக்காலை நடத்தினர்.

நேற்று அதிகாலை ஐந்து மணி முதல் ஒன்பதரை மணிவரை இடம்பெற்ற இந்தத் தேடுதலின்போது அப்பகுதி மக்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மன்னாரில் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெறுவதால் பாதுகாப்பு முன்னேற்பாடு கருதி இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். இத் தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை காசிலிங்கம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை காசிலிங்கம் அவர்கள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் தம்பிப்பிள்ளை- செல்லர் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தகுமார், உருத்திரகுமார், சிவகுமார், திருமதி சாந்தினி பரமநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை கொக்குவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
*உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (49779) (18-34-12)
**கா.சிவகுமார் (மகன்).**

### முத்தையா சண்முகராசா
*(சிகரம்-சண்முகம்)*



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சண்முகராசா அவர்கள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கலாமதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தவராசா மற்றும் தங்கராசா (சுவிஸ்), மதிமுகராசா, மீனலோசினி (கனடா), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பலீலா, புஸ்பராணி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் யோகராசா (ஜேர்மனி), செல்வராசா (இத்தாலி), புஸ்பரத்தினம், கதிர்காமராசா (இத்தாலி), ஜெயராசா (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் விஜிதா, சுபாசினி, கனகேஸ்வரி, றெஜினா, சபேசன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற மகாலிங்கம், சுந்தரலிங்கம், சந்திரமதி, செந்தில்செல்வன் ஆகியோரின் மைத்துனரும் றிசாந்தன், றிசாந்தி, சௌத்திகா, யதுசன், சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**
*நெல்லொரு பகுதி பிள்ளையார் கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில்.* (49774) (18-34-12)


ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடிக்க
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகர்ஸ் சுன்னாகம்
ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஸ்யும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி


## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து திருச்செல்வம்



தம்பாட்டி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் ஊர்காவற்றுறை பிரதேசயின் சபை உப தலைவரும் சமாதான நீதிவானும் முன்னாள் காலி மாலா ஸ்ரோஸ் உரிமையாளருமான நாகமுத்து திருச்செல்வம் அவர்கள் 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானாம்பாள், காலஞ்சென்ற இராசாம்மாள், அமரசிங்கம், இன்பக்கிளி,தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நேசன், பாமாதேவி, காலஞ்சென்ற மாலன், வசந்தமாலா (பிரான்ஸ்), வசந்தன் (பிரான்ஸ்), பாலன் (பிரான்ஸ்), வசந்தரூபி (லண்டன்), திருமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் மாலா(பிரான்ஸ்), சூரியகுமாரி, பேபலோசன், அருள்செல்வன்(பிரான்ஸ்), வசந்தகுமாரி (பிரான்ஸ்), இராசசேகரன்(லண்டன்), சாந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.04.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாட்டி விறாட்டிமுனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை வடக்கு, தம்பாட்டி,ஊர்காவற்றுறை.* (49782) (18-12-34)
தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### மாணிக்கம் ஜெகநாதன் ஆச்சாரி



கொக்குவில் மேற்கு, சொர்ண வடலியை வசிப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் ஜெகநாதன் ஆச்சாரி அவர்கள் நேற்று(24.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்புலட்சுமியின் கணவரும் மாணிக்கவாசகம், நாகேஸ்வரி, சாந்தினி, மோகன், மனோகர், மகேஸ்வரன் (பாபு - பிரான்ஸ்), பாஸ்கரன்(கொழும்பு) ஆகியோரின் தந்தையும் இராமகிருஷ்ணன், தீனபந், சிவகௌரி, ராஜராஜேஸ்வரி, சர்மிளா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் சாருஜன், நிருஜன், அனுசா, இந்துமதி, சுகன்யா, ரிஷ்யந்தன், ஆகாஷன், சங்கவி, அபிஷேக், சௌம்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/24, பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
தொ.பே.: 0777732615, 0777221452 (49777) (18-34-12)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி இராசம் நல்லையா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம் நல்லையா அவர்கள் நேற்று(24.04.2006) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னம்மா தம்பதியரின் புதல்வியும் அமரர் நல்லையாவின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி(கனடா), நாதன்(பிரதி அதிபர் - வசாவிளான் ம.ம.வி.), சிறீமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் இராசரத்தினம் (கனடா), காலஞ்சென்ற ஜெயரூபி மற்றும் ஜெயகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெகதீஸ்வரியின் சிறியதாயும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அன்னலட்சுமி , காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், நகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சி.சின்னையா, த.சின்னையா மற்றும் புவனேஸ்வரி , காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.04.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞான வைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.* (49778) (18-34-49)
தகவல்:
**ந.நாதன்(மகன்).**

### குமாரசாமி கனகரத்தினம்

நல்லூர், முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும் மாலி சந்தியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகரத்தினம் அவர்கள் நேற்று(24.04.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குமாரசாமி தம்பதியரின் மூத்த புதல்வனும் உடுப்பிட்டியைச் சேர்ந்த அமரர் மங்கயற்கரசியின் அன்புக் கணவரும் யோகரத்தினம், கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சதாசிவத்தின்(குருக்கள்) சகோதரரும் பாரதிதேவி, தவேந்திரன் (சோக்கன்) ஆகியோரின் மாமனும் கௌரி மனோகரி, தாட்சாயினி, தவேஸ்வரி, காஜத்திரி, ரகுராம், ரஜனிகாந் (கண்ணன்) ஆகியோரின் பேரனும் நவிநயாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மாலி சந்தி, அல்வாய்.* (சி-49090) (18-34-49)
**க.யோகரத்தினம் (மகன்), அ.தவேந்திரன் (சோக்கன்-மருமகன்), ரஜனிகாந் (கண்ணன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-குவைதா சந்தேகநபர்கள் ஐவர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, ஏப். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கும் - அல்-குவைதா உறுப்பினர்களெனச் சந்தேகிக்கப்படும் - ஐந்து பேர் மீதான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு இன்ரபோலின் உதவியை நாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவார காலத்திற்கு முன்னர் மாலை தீவிலிருந்து இலங்கை வந்த மேற்படி ஐந்து பேரும் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் தங்கியிருந்து விட்டு கட்டாரை நோக்கிச் செல்லத் தயாரானபோதே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிக்கினர்.

ஆணொருவர், பெண்கள் இருவர், சிறுவர்கள் இருவரென்று மேற்படி ஐந்து பேர் தொடர்பில் அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் வழங்கிய இரகசியத் தகவலொன்றையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை நடத்திவரும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு இதற்காக இன்ரபோலின் உதவியை நாடவுள்ளது. (எ-க)

# இறக்குமதியாகும் மோ.சைக்கிள்களை பதிவுசெய்வதற்குப் புதிய நடைமுறை

இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் தற்போது புதிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டுவருகிறது என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் பீ.விஜே ரத்ன தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யும் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் இந்தப் புதிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

புதிய திட்டத்தின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் சகல மோட்டார் சைக்கிள்களினதும் தகவல்கள் பிரதான தரவு வங்கியொன்றில் பதிவுசெய்யப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து வழங்கப்படும் சான்றிதழ்களின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட உள்ளன.

எனவே, நாட்டின் சகல மோட்டார் சைக்கிள் இறக்குமதியாளர்களும் புதிய நடைமுறைகளின் பிரகாரம் தம்மால் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களை தரவு வங்கியில் பதிவுசெய்து கொள்ளுமாறு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஆண்டுதோறும் மோட்டார் சைக்கிள் பாவனை பன்மடங்காக அதிகரித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் பலவகையான புதிய மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டுவருகின்றன எனவும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-க)

## யாழ்.நகரில் நேற்று படையினர் சோதனை

வலி.வடக்கு, ஏப்.25

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில், சிவன் கோயில் அருகில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டு வீசப்பட்டது. இதனை அடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக நேற்று காலை முதல் பகல் 10 மணிவரை காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதி, கன்னாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதிப் பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள் எனப் பல இடங்களிலும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். வீதிகளிலும் மக்களை மறித்து அவர்கள் சோதனையிட்டார்கள். (ம-86)

## எல்லாளன்படை உரிமைகோரியது

கொழும்பு, ஏப்.25

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் நாகமுத்து திருச்செல்வத்தின் கொலைக்கு யாழ். மாவட்ட எல்லாளன்படை உரிமைகோரியுள்ளது. இது தொடர்பாக எல்லாளன்படை நேற்றிரவு பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன வன்முறையைத் தூண்டாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

நாட்டில் இனவன்முறையை வெடிக்கச் செய்வதன் மூலம் இலாபமடைவதற்கு சில சக்திகள் முனைகின்றன. அதற்குத் துணை போகாமல் பொறுப்புணர்ந்து செயற்படும்படி பத்திரிகை ஆசிரியர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - இயன்றவரை முன்னெடுப்பதில் அரசு உறுதியாக உள்ளது. ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அரசும், படையினரும் அதீத பொறுமை காப்பதற்கு இதுவே காரணம்.

அரசும், படையினரும் இவ்வளவு பொறுமை காத்து முன்னெடுக்கும் சமாதான எத்தனங்களை செய்தி ஊடகங்கள் குழப்பி விடக்கூடாது. அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பது உங்கள் கடமை.

எந்தச் செய்தியையாவது வெளியிடாதீர்கள் என்று நான் தடுக்கவோ, கூறவோ வரவில்லை. ஆனால், எந்தச் செய்தியை வடிவமைக்கும் போது அது இனவன்முறைக்குத் தூண்டாத வகையில் அமைவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் - என்று கேட்டுக் கொண்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (உ)

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தில் ஓட்டோக்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. இந்த சேவைப் புறக்கணிப்பிற்கான அழைப்பை ஓட்டோச் சங்கம் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நெல்லியடியில் வைத்து ஓட்டோ சங்கத் தலைவரும் மற்றோர் ஓட்டோ சாரதியும் சுட்டுக் கொல்லப்பட்டனர். மறுநாள் இருபாலையில் வைத்து ஓட்டோ சாரதியான இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவங்களுக்கு முன் புத்தூரில் ஓட்டோவில் சென்ற நால்வர் கூண்டோடு படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஓட்டோ சாரதிகளாவர்.

இவ்வாறு ஓட்டோ சாரதிகள் கொலை இலக்குகளாக்கப்படுவதைக் கண்டித்தே நேற்றைய போராட்டம் இடம்பெற்றது. (ம-86-15-16)

## 'உதயன்',...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய பின்னர் 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரியருடன் சில நிமிடங்கள் உரையாடிய சமயம் அவர் இவ்வாறு கூறினார்.

"கொழும்பில் உள்ள சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு நான் என்ன வழிகாட்டுதலை - ஆலோசனையை - வழங்கினாலும் அவர்களை (புலிகளை) அவை எட்டப்போவதில்லை. அந்தப் பத்திரிகைகளை அவர்கள் வாசிப்பதில்லை.

"உடன் (சுடச்சுட) உங்கள் பத்திரிகைதான் ('உதயன்', 'சுடர் ஒளி' தான்) அவர்கள் கைகளுக்குப் போகின்றன. அவர்கள் உங்கள் பத்திரிகையைத்தான் வாசிக்கின்றார்கள். எனவே, நீங்கள் பொறுப்புணர்ந்து செயற்படுவீர்களானால் அவர்களையும் திருத்தி, பிரச்சினைக்கும் தீர்வைக் காண உதவலாம். அப்படிச் செயற்படுவீர்கள் என எதிர்பார்க்கிறேன். உங்களால் செய்ய முடியும்." - என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (உ)

## மூதூர்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாலயத்திலும், பாரதிபுரத்தைச் சேர்ந்த மக்கள் பாரதிபுரம் பாடசாலையிலும், சிவபுரம், மேன்காமம் ஆகிய பிரதேச மக்கள் மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்திலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும் பட்டித்திடல், பாலத்தடிச்சேனை பிரதேச மக்கள் அச்சத்தினால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூர் கிழக்கிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் பள்ளிக்குடியிருப்பு, தங்கபுரம் பாடசாலைகளில் தஞ்சமடைந் திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாடசாலைகளில் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு நிவாரண உதவி எதுவும் இதுவரை உரிய முறையில் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூதூர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரான எம். சௌந்தரராஜன் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடம்பெயர்ந்துள்ள மக்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுமுறைக்குப் பின்னர் நாட்டில் அரச பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் நேற்று மூதூர் பகுதிகளில் அரச பாடசாலைகள் இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பித்திருந்தன. மூதூரில் பல பகுதிகளில் இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பதால் மக்கள் ஒருவித அச்சத்துடன் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

## சரசாலை, வேம்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மீதான தாக்குதலை அடுத்து வேம்பிராய், சரசாலை பகுதிகளில் தேடுதல் நடத்தப்பட்டது. வீடு வீடாகச் சென்ற படையினர் பொதுமக்களை தீவிர சோதனைக்குட்படுத்தினர் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் - நேற்று முன்னிரவு 7 மணியளவில் கனகன்புளியடிச் சந்தியூடாகப் பயணித்த பயணிகள் மினிபஸ் ஒன்று அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரால் வழிமறிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் -

குறிப்பிட்ட பஸ்ஸை நோக்கி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிக்கி பயணிகள் இருவர் காயமடைந்தனர் என்றும் - இணையத்தளச் செய்தி ஒன்று கூறியது.

எனினும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் எவராவது சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனரா என்பதை அறிந்து கொள்ள சாவகச்சேரி ஆஸ்பத்திரியுடன் நேற்று முன்னிரவு முதல் நள்ளிரவுக்குப் பின்னரும் பல தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தோம். எனினும், தொடர்பு கிடைக்காததால் அதனை உறுதிப்படுத்தமுடியவில்லை.

இதேவேளை - மேற்படி சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த கஜேந்திரன் எம்.பி:-

"முற்கொண்டு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றிரவு 11.30 மணியளவில் யாழ். மாவட்ட படைத் தளபதியுடன் தொடர்புகொண்டு பேசினேன். அதற்கு அவர், குறிப்பிட்ட மினிபஸ்ஸில் இருந்து படையினரின் பதுங்கு குழியை நோக்கி துப்பாக் கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள் ளது என்றும் -

இதனையடுத்து சம்பந்தப்பட்ட மினி பஸ்ஸைமறித்த படையினர், பொலீஸாரின் உதவியுடன் விசாரணைகளை நடத்திவருகின்றனர் என்றும் - தம்மிடம் தெரிவித்ததாக கஜேந்திரன் எம்.பி. நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

படையினரின் சோதனைகளையடுத்து குறிப்பிட்ட மினிபஸ்ஸும் மற்றும் -

அதில் பயணித்த பயணிகளும் விடுவிக்கப்பட்டனரா அல்லது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனரா என்பதை இச் செய்தி அச்சுக்குப் போகும்வரையில் அறிந்துகொள்ள முடியவில்லை. (எ-13-117)

## புலிகள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோமரசன்கடவல கொலைச் சம்பவம் குறித்து நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கும் அரசு, இரண்டாம் சுற்று அமைதிப் பேச்சுக்காக அரசு, நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகிய தரப்புகள் முயற்சிகளை எடுத்து வரும் நிலையில் இவ்வாறன சம்பவம் துரதிர்ஷ்டவசமானதென்று கூறியிருக்கின்றது.

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதால், இனரீதியான மோதல்களை உருவாக்கும் சதித்திட்டங்களில் மக்கள் சிக்கிவிடக் கூடாதென்றும் அரசின் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

ஐடியல் அக்கடமி
நீராவியடி
O/L பெறுபேறுகள் வெளியானதும்
O/L Day Class
ஆரம்பமாகவுள்ளது.
மாணவர்களே! தயாராகுங்கள்
கணிதம் :
V.N.பத்மநாதன்

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் யார் என இனங்காணப்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடற்றொழிலுக்குச் செல்வதற்காக மாலை 6 மணியளவில் இவர் கடற்கரைக்குச் சென்ற வேளையில் இவரைப் பின்தொடர்ந்து சென்றவர்களே இவரைச் சுட்டுவிட்டு சென்றனர் எனவும் பொலீஸார் மேலும் கூறினர்.

இவருடைய சடலம் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியின் மரண விசாரணையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ம-86-15)

## ஹெலி வசதி பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து நீடிக்கின்றது. இதனால் அடுத்த சுற்று அமைதிப் பேச்சுக்கான ஏற்பாடுகளும் இழுபடுகின்றன.

விடுதலைப் புலிகளின் போக் குவரத்து ஏற்பாடு குறித்து அரசின் இறுதி முடிவு அனுப்பப்பட்டுள்ளது என கொழும்பில் தெரிவிக்கப்பட்டபோதும் நேற்றுமாலை வரை அவ்வாறான முடிவுகள் எதுவும் உத்தியோக பூர்வமாக கிடைக்கவில்லையென வன்னியில் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தளபதிகளின் போக்குவரத்து ஏற்பாடுகளில் எழுந்துள்ள சிக்கல்நிலை குறித்து நேற்று கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவரும் முக்கிய பேச்சு நடத்தினர் என கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

## வன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல முயற்சிகளையும் மேற்கொண்டு, ஸ்தம்பித்துப் போயிருக்கும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

வன்செயல்களின் அதிகரிப்புக் காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையும் பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. இந்நிலை கவலை தருவதாகவும் அமைகிறது.

"வன்செயல் பெருக்கத்தின் மத்தியிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் தமது கொள்கை அரசால் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்" - என்று இலங்கை அரசு இந்தியாவிடம் தெரிவித்திருக்கிறது. அத்தோடு பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தனது எண்ணத்தையும் இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. இலங்கை அரசின் இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம். அதேவேளை, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களை அப்பழுக்கு எதற்கும் இடம் கொடுக்காத முறையில் அதே உணர்வுடன் ஒழுக முன்வருமாறும் சம்பந்தப்பட்ட தரப்பார்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

"எந்த ஒரு பிரச்சினைக்கும் வன்செயல்கள் தீர்வாகாது. தீர்க்கப்படாதிருக்கும் விவகாரங்களுக்கு தீர்வைக் காண்பதற்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வொன்றைக் காண்பதே இன்றுள்ள ஒரே வழியாகும்." - என்ற இந்திய அரசின் உறுதியான கொள்கையை இந்த அறிக்கை மூலம் மீண்டும் வெளிப்படுத்துகின்றோம். சம்பந்தப்பட்ட தரப்பார்கள் அனைவரும் பேச்சைக் கூடிய விரைவாக ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, ஸ்தம்பித்துப் போயிருக்கும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு தர்மகுலசிங்கம்

**(இ.போ.ச.வவுனியா சாலை பரிசோதகர்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியில் வசித்தவரும் தற்போது ஏழாலையில் வசித்தவருமான கதிரவேலு தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று (24.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - முத்துப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும் காந்திமதியின் அன்புக் கணவரும் கீர்த்திகா, டிவாரகா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), திருவரன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்

பற்குணசிங்கம் (கிராம சேவையாளர்), சற்குணசிங்கம் (கனடா), பரராஜசிங்கம் (கிராம அலுவலர்), தனபாலசிங்கம் (கனடா), திருமதி ஜெகதீஸ்வரி தர்மலிங்கம் (**M.P.C.S.**,வவுனியா), திருமதி ரட்ணேஸ்வரி மங்களேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (49091)(25)(34-49)

*சைவ சன்மார்க்க வித்தியாசாலையடி,*
*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 மே

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### அரசியல் மூலத்தத்துவங்கள் I

திரு. A. கியூபேட். (B.A.). யாழ்.

01) அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்புக்கு மிகப்பொருந்தும் சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) அரசுப் பாலனக் கலை
(B) தேசங்களுக்கிடையிலான அரசியல்
(C) மக்களுக்கிடையிலான சமூகத் தொடர்புகள்
(D) சர்வதேச நிறுவனங்களின் பங்குகள்.
(1) ABC (2) ABD (3) BCD (4) ACD (..............)

02) அரசியல் விஞ்ஞானதைக் கற்பதன் நோக்கங்களுடன் மிகப்பொருந்தும் சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(A) சமூகத்தின் கலாசார விழுமியங்களைப் பற்றிய அறிவை மேம்படுத்தும்
(B) அரசியல் முறைமைகள் பற்றிய விளக்கத்தைப் பரவலாக்கும்
(C) அரசியலில் செயற்பாட்டு பங்கேற்புக்கான அறிவைப் பெருக்குதல்
(D) பிரஜைகளின் சமூகப் பொறுப்புகளைப் பற்றிய அறிவை விருத்தி செய்தல்
(1) ABC (2) ABD (3) BCD (4) ACD (..............)

03) அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பதற்கான அணுகுமுறைகளை விளக்கும் பிழையான கூற்றைத்தெரிவுசெய்க.
(1) நடத்தைவாத அணுகுமுறை அரசியல் நிலமைகளில் இடம்பெறும் மனித நடத்தையில் கவனஞ்செலுத்துகிறது.
(2) வரலாற்று அணுகுமுறை அரசியலின் சமூகத்தளத்தைக் கற்பதன் மூலம் அரசியலை ஆராய்கிறது.
(3) ஒப்பீட்டு அணுகுமுறை தற்கால, கடந்தகால அரசியல் முறைமைகளை ஒப்பிட்டு ஆராய்கிறது.
(4) மெய்யியல் அணுகுமுறை முன்வகுக்கப்பட்ட கோட்பாடுகளிலும் கருதுகோள்களிலும் தங்கியுள்ளது.

04) தேசிய அரசின் தோற்றத்திற்கு மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
(1) அது கிரேக்க நகர அரச காலத்தில் தோன்றியது.
(2) அது தோன்றுவதற்கான சூழலைப் புரட்டஸ்தாந்துச் சீர்திருத்த இயக்கம் வழங்கியது.
(3) அது மானிய முறையின் எழுச்சியின் விளைவினதாகும்
(4) அது தோன்றுவதற்குக் கத்தோலிக்கத் திருச்சபை உதவியது.

05) அரசுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(A) அரசு சமூகத்தின் பொதுநன்மைக்காகச் செயற்படுகிறது
(B) அரசு ஒரு சட்டம் சார்ந்த சங்கமாகும்
(C) அரசின் உறுப்புரிமை விருப்புக்குரியதாகும்
(D) அரசு மட்டுமே நிர்ப்பந்திக்கும் அதிகாரத்தைத் தனியுரிமையாகப் பெறுகிறது.
(1) ABC (2) BCD (3) CDA (3) DAB (..............)

06) அரசாங்கத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க
(A) அரசாங்கம் அரசின் கருவியாகும்
(B) அரசாங்கத்தின் உறுப்புரிமை வலுக்கட்டாயமானது
(C) அரசாங்கத்துக்கு இறைமை அதிகாரம் உண்டு
(D) அரசாங்கம் அரசின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துகின்றது
(1) ABC (2) BC (3) AD (4) DAB (..............)

07) சமூகத்திற்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க
(1) சமூகம் இயற்கையானதாகும்
(2) சமூகத்திற்கு எல்லைகள் இல்லை.
(3) சமூகமானது மனிதரால் ஒழுங்கமைக்கப்பட்ட சகல சமூகத்தாபனங்களையும் உள்ளடக்கியதாகும்
(4) சமூகமானது அதன் உறுப்பினர்களின் கட்டாய ஒத்துழைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

08) சங்கங்களிற்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சங்கங்கள் என்பது தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஒழுங்கமைந்த மனிதக் குழுக்களாகும்
(2) சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட ஆள்புலத்துக்குள்ளேயே செயற்படுகின்றன.
(3) சங்கங்கள் அரசின் விருப்புக்குட்பட்டே செயற்பட வேண்டும்
(4) சங்கங்கள் என்பது விருப்புக்குரிய உறுப்புரிமையைக் கொண்ட சுயேச்சை நிறுவனங்களாகும்

09) அரசு பற்றிய தாராண்மைக் கோட்பாட்டுக்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அரசு மனிதரால் உருவாக்கப்பட்ட அதியுயர் சமூகத் தாபனமாகும்.
(2) அரசு மனிதரின் சிறப்பான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாகும்.
(3) அரசு மனித இனம் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.
(4) அரசு மனிதரை அடக்குவதற்கே சட்டங்களைப் பிறப்பிக்கிறது.

10) அரசு பற்றிய மாக்சீயக் கோட்பாட்டுக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
(1) அரசு வர்க்கப் போராட்டத்தின் விளைவினதாகும்
(2) அரசு சமூகத்திலுள்ள சகல வர்க்கங்களுக்கும் சமனான வகையில் சேவையாற்றுகிறது.
(3) அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு மட்டுமே சேவையாற்றவுள்ளது.
(4) அரசு நிரந்தரமற்றது. அது கமியூனிசிய சமூகத்தில் உதிர்ந்து விடும்

11) இறைமைக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க
(A) இறைமை என்பது அரசின் மீயுயர் அதிகாரமாகும்
(B) இறைமை ஏனைய சமூகத் தாபனங்களை விட அரசை உயர்ந்ததாக்குகின்றது.
(C) இறைமை அரசு பிறப்பிக்கும் சட்டங்களுக்குச் சட்ட ரீதியான தன்மையை வழங்குகின்றது
(D) இறைமையைப் பிரிக்கவும் ஒப்படைக்கவும் முடியும்
(1) ABC (2) BC (3) AD (4) DAB (..............)

12) உரிமைகள் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க
(A) உரிமைகள் என்பது சமூக ஒப்புதலைப் பெற்ற தனிமனிதரின் கோரிக்கைகளாகும்
(B) உரிமைகள் அரசின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னரே பொருளுடையதாகின்றன.
(C) உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சட்டங்கள் அவசியமாகின்றன.
(D) எக்கோரிக்கைகயையும் சட்டத்தின் மூலம் உரிமையாக மாற்றலாம்
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

13) சுதந்திரம் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(A) சுதந்திரம் என்பது ஒருவர் தாம் விரும்பும் எதனையும் செய்வதற்குள்ள வாய்ப்பாகும்
(B) ஒரு சாராரின் உரிமைகள் ஏனையோரின் விருப்பில் தங்கியிருப்பின் அங்கு சுதந்திரம் நிலவப்படமாட்டாது.
(C) சுதந்திரத்துக்கு உரிமைகள் அவசியமாகின்றன.
(D) சுதந்திரமும் ஆணையதிகாரமும் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவையன்று
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

14) சமத்துவம் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(A) சமத்துவம் சகலருக்கும் சமவாய்ப்பு உண்டு எனக்கருதுகின்றது
(B) கணிதவியலாளனும் கொத்தனும் ஒரு சமமானவர்களாகக் கருதப்படாவிட்டால் அங்கு சமத்துவம் நிலவமாட்டாது.
(C) சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சமத்துவம் அவசியமாகிறது.
(D) ஒரு சாராருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை ஏனையோருக்கும் உறுதிப்படுத்த வேண்டும் என அது கூறுகிறது.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

15) வலுவேறாக்க கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) அது அரசாங்கத்தின் பிரதான பணிகளைப் பிரிக்க வேண்டும். எனக் கூறுகின்றது.
(B) இவ் எண்ணக்கரு தாராள ஜனநாயகத்துக்கு ஒரு கோட்பாட்டுத் தளத்தை வழங்குகின்றது.
(C) ஆனால், அது பாசிசம் மற்றும் கம்மியூனிசத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
(D) இவ் எண்ணக்கருவின் முன்னோடியின் நோக்கம் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும்
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

16) சட்டத்துக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
(A) சட்டம் மனிதரின் இருப்பையும் நடத்தையையும் கட்டுப்படுத்தும் விதிகளின் தொகுதியை வெளிப்படுத்துகின்றது.
(B) சட்டம் மனிதரின் வெளிவாரியான செயற்பாடுகள் உள்வாரியான சிந்தனைகள் ஆகிய இரண்டையும் ஒழுங்குபடுத்துகின்றன.
(C) சட்டம் அரசின் பலவந்த அதிகாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
(D) சட்டமும் ஒழுக்கமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும்
(1) ABC (2) ACD (3) ABD (4) BCD (..............)

17) சட்டத்தின் ஆட்சிக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) ஏ.வீ டைசி நவீன சட்டவாட்சிக் கொள்கையை விரித்துரைத்தவர் ஆவார்.
(B) அது சகலருக்கும் சட்டத்தின் முன் சமத்துவத்தையும் சமமான சட்டப் பாதுகாப்பையும் வலியுறுத்துகின்றது.
(C) சட்டத்தின் ஆட்சியையும் யாப்புறு வாதத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது.
(D) அது ஆட்சியாளர்கள் சட்டத்துக்கு மேம்பட்டவர்கள் என்று ஏற்றுக்கொள்கின்றது.
(1) ABC (2) ABD (3) BCD (4) ABCD (..............)

18) பொதுசன அபிப்பிராயம் தொடர்பான பிழையான கூற்றினை இனம்காண்க.
(1) அது அரசியல் பங்குபற்றதலின் ஒரு மறைமுக மாதிரியாகும்
(2) அது ஒரு மனப்பாங்கின் பிரதிபலிப்பாகும்
(3) பிரச்சினைகள் மேலும் விரிவாகும்போது அதன் செல்வாக்கு அதிகரிக்கின்றது.
(4) அனைத்தாண்மை அரசாங்கங்களின் கீழ் பொதுசன அபிப்பிராயம் சுருங்கிவிடுகின்றது.

**☆ அரசியல் கட்சிகளின் அமுக்கக் குழுக்கள் தொடர்பான சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாக வாசித்து 19, 20 ஆம் வினாக்களிற்கு விடை எழுதுக.**

(A) நலன்களைத் தெரிவு செய்து அடயமுறப்படுகின்றன.
(B) பாதுகாத்து முன்னேறும் ஒழுங்கமைப்புகள் எனக்கொள்ளப்படுகின்றன.
(C) அவற்றின் பன்மைத் தன்மையிலான அரசியல் அபிவிருத்திகளின் ஒரு அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.
(D) அதிகாரத்தினைக் கைப்பற்றுதல்ஒரு நோக்கமல்ல
(E) அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் ஒழுங்கமைப்புகள்
(F) ஆளுபவர்களுக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் நேரடித்தொடர்பினை ஏற்படுத்துகின்றது.
(G) பொதுக்கொள்கை மீது செல்வாக்குச் செலுத்த முயலும் குழுக்கள்
(H) தலைவர்களை ஆட்சேர்த்துப் பயிற்சி வழங்கும் முதல்வர்களாகச் செயலாற்றுதல்

19) அரசியல் கட்சிகளுக்குப் பிரயோகிக்கக் கூடிய இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.
(1) ABDF (2) CEFG (3) HAFB (4) EFHC (..............)

20) அமுக்கக் குழுக்களுக்குப் பயன்படுத்தக் கூடிய இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க
(1) CDGH (2) ABEF (3) ABDG (4) DEFG (..............)

**☆ இரு பிரதான பிரதிநிதித்துவ முறைகளோடு சம்பந்தப்படும் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.**

(A) கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கைக்குச் சமமான ஆசனங்களின் எண்ணிக்கை நேரடியாகத் தொடர்புபடுகிறது.
(B) கணிசமானளவு எண்ணிக்கையான வாக்காளர்கள் எத்தகைய பிரதிநிதித்துவத்தையும் பெறத்தக்க வாய்புண்டு
(C) கட்சித் தலைவர்களை உயர்நிலையில் வைக்கின்றது.
(D) சிறு கட்சிகளுக்குப் பாதகமாயுள்ளது.
(E) பிரதேசத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிந்தனை அடிப்படையாகக் கொண்டது.
(F) கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டது.

21) விகிதசம முறைக்குப் பெறுமதியான சேர்மானத்தைக் காட்டுக.
(1) ACDF (2) BCD (3) ACF (4) ABCE (..............)

22) பெரும்பான்மை முறைக்குப் பெறுமதியானசேர்மானத்தைக் காட்டுக.
(1) BCD (2) DEF (3) CDE (4) BDE (..............)

23) குடிமுனைக்குப் பொருத்தமான சேர்மானத்தை அடையாளம் காண்க.
(A) சட்டங்களை இயற்றுவதில் மக்களுக்கு வாய்ப்பளிப்பதில் அது வழிகாட்டுகின்றது.
(B) சட்டசபைகளின் அதிகாரத்தைக் குறைக்கிறது.
(C) மக்களின் அதிகாரத்தினை வெளிக்காட்டுகின்றது.
(D) அது முறைப்பாடு செய்வது போன்றது
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD (..............)

24) பாசிச அரசுக்குப் பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.
(A) சமூகத்தினை இராணுவ மயமாக்கல்
(B) தனியார் சொத்துரிமையினை ஏற்றல்
(C) தலைவர்களுக்கு மேன்மையான இடம் வழங்குதல்
(D) சட்டத்தின் ஆட்சி நிலவுதல்
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

25) பின்வருவனவற்றில் அரசியல் யாப்பொன்றில உள்ளடக்கப்படுவதற்குக் குறைந்தளவு வாய்ப்புடையது யாது?
(1) அரசாங்கத் தாபனங்களுக்கிடையில் அதிகாரப்பங்கீடு
(2) அரசியல் யாப்பைத் திருத்தும் வழிமுறை
(3) நிருவாக அதிகாரிகளைச் சேர்த்துக்கொள்ளும் வழிமுறை
(4) பிதிநிதித்துவ முறை

26) நெகிழா யாப்புக்கு அதிகம் பொருந்தும் கூற்றைத் தெரிவு செய்க.
(1) யாப்பை விரும்பியவாறு மாற்றலாம்.
(2) யாப்பை மாற்றுவதற்கு விஷேட வழிமுறையைப் பின்பற்ற வேண்டும்.
(3) யாப்பு பிரசைகளின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றது.
(4) யாப்பை எப்போதும் மாற்றவியலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) சோவியத் அரசாங்க முறைக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) அது சட்டரீரியாகவேனும் வலுநோக்கற் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.
(B) சோவியற் யூனியனின் பிராந்திய அலகுகள் பிரிந்து செல்லும் உரிமையைப் பெற்றிருந்தன.
(C) நீதிபதிகள் சட்டத்துறையாலும் நியமிக்கப்பட்டனர்.
(D) அங்கு பல கட்சித் தேர்தல்கள் இடம்பெற்றன.
(1) ABC (2) BCD (3) CDA (3) DAB (..............)

28) பிரித்தானியா அரசாங்க முறைக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) மகாராணியார் ஆளுகிறார் ஆனால் ஆட்சிபுரிவதில்லை
(B) இன்று பிரபுக்கள் சபையில் ஆயுட்காலப் பிரபுக்களே பெரும்பான்மையினராவார்
(C) பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்கள் நீதிப்புனராய்வுக்கு உட்படுகின்றன.
(D) பிரதமர் தமது அமைச்சரவையைப் பாராளுமன்றத்திலிருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும்.
(1) ABC (2) BCD (3) BDA (3) DAC (..............)

29) பிரான்சிய சனாதிபதிக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
(A) தேசியப் பேரவையைக் கலைப்பதற்குத் தற்துணிவு அதிகாரம் உண்டு.
(B) சனாதிபதி அமைச்சரவைக்குத் தலமை தாங்குகின்றார்.
(C) அவர் மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகின்றார்.
(D) அரசுப்பேரவையும் அரசியலமைப்புப் பேரவையும் மேற்கொள்ளும செயற்பாடுகளின சட்டரீதியான தன்மையை மேற்பார்வை செய்கின்றார்.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

30) மீள அழைப்பிற்கு பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க
(A) அது அரசாங்க அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்யும் நடைமுறை ரீதியானதும செயற்திறன்மிக்கதுமான ஒரு முறையாகும்
(B) இம்முறை பின்பற்றப்படும் நாடுகளில் அதன் பிரயோகம் பிரதேச அல்லது மாகாண மட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.
(C) அது அரசாங்க அதிகாரிகளை நிக்குவதற்கு வாக்காளர்களுக்கு அதிகாரத்தை வழங்கும் ஒரு முறையாகும்
(D) அதிகாரிகள் அதிகப் பொறுப்புடன் செயற்படுவதற்கு உதவுகிறது.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (..............)

31) சமஷ்டித் தத்துவங்களை விவரிப்பதில் பிழையான கூற்று
(1) யாப்பினூடாக அரசாங்க அதிகாரத்தினை முறைப்படி பிரித்தல்
(2) அரசாங்கத்தின் பிராந்திய அலகுகளை உருவாக்குதல்
(3) தத்தமது அலகினால் நிறைவேற்றபட்ட சட்டங்களுக்கு மாத்திரம் மக்கள் பணிந்து நடப்பர்
(4) யாப்பின் அதி உயர் தன்மையான ஒரு முன்னணி இயல்பு

32) கீழே தரப்படும் சமஷ்டி முறைகள் தொடர்பான பிழையான கூற்றுக்களை அடையாளம் காண்க
1) இந்திய யாப்பு மிகவும் பலம் வாய்ந்தது. மத்திய அரசாங்கம் ஒன்றிற்கு இடமளிக்கின்றது.
2) சோவியத் யூனியனில் பிராந்திய அலகுகள் பிரிந்து செல்ல உரிமை இருந்தது.
3) கனடாவில் பிராந்திய அலகுக்கு எல்லா எஞ்சிய அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.
4) ஐக்கிய அமெரிக்காவில் செனற் சபை சம அரசுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

33) தெய்வீக உரிமைகள் கோட்பாட்டிற்குப் பயன்படுத்த முடியாத கூற்று எது?
1) கடவுளுக்கு மட்டுமே கணக்குச் சொல்ல வேண்டிய ஆட்சியாளர்கள்.
2) ஒரு துஷ்ட அரசன் கடவுளின் தண்டனையைப் பெறுகிறான்.
3) அரசர்களின் அதிகாரங்களைப் பாராளுமன்றங்கள் கட்டுப்படுத்துகின்றன.
4) அரசுக்கு அடிபணிதல் மக்களின் கடமையாகும்.

34) நூலாசிரியர்களோடு பொருந்தக்கூடிய சரியாகச் சேர்மானமாகின்ற சோடியினைக் காண்க.
(A) இயல்பில் மனிதன் ஓர் அரசியல் பிராணியாவான் - அரிஸ்ரோட்டில்
(B) மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் ஆனால் எல்லா இடங்களிலும் அவன் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றான் - மக்கியவல்லி
(C) ஆட்சியாளன் நரியையும் சிங்கத்தையும் போன்று நடிக்க வேண்டும் - ரூசோ
(D) இயற்கை நிலையில் வாழ்வு தனியானது, மனவெறுப்பூட்டுகின்ற மிருகத்தன்மையானது, போட்டியானது, குறுகியது - தோமஸ் ஹொப்ஸ்
(1) AB (2) BCD (3) CD (4) AD (..............)

35) அரசின் இயல்பு சரியாகப் பொருந்துகின்ற அரசு மாதிரியை அடையாளம் காண்க
(1) நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் - மானியமுறை
2) போட்டிக்கட்சிமுறை - சோசலிஷஅரசு
3) பாட்டாளியின் அதிகாரம் - பாசிச அரசு
4) அரசின் புகழ் பாடுதல் - தாராண்மை ஜனநாயக அரசு

☆ **36 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரு கூற்றக்கள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு வினாவிலும் இடம்பெறும் சோடிக்கூற்றுக்குப் பொருத்தமான விவரிப்புக்களை, கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெரிவுசெய்து ஒவ்வொரு வினாவிற்கும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் 1, 2, 3, 4 என அடையாளம் இடுக.**

| கூற்று I | கூற்று I | இலக்கம் |
|---|---|---|
| உண்மை | உண்மை | 1 |
| பொய் | உண்மை | 2 |
| உண்மை | பொய் | 3 |
| பொய் | பொய் | 4 |

| கூற்று I | கூற்று II |
|---|---|
| 36 ஐக்கிய அமெரிக்க உயர்நீதிமன்றுக்கு நீதிப் புனராய்வு அதிகாரமுண்டு | காங்கிரஸ் மூன்றில் பெரும்பான்மை மூலம் சனாதிபதியின் அதிகாரத்தை நிராகரிக்க முடியும். (......................) |
| 37 பிரான்சிய ஜனாதிபதி தமது சுயவிருப்பில் அமைச்சர்களை நியமிக்க முடியாது. | பிரான்சின் அரசியலமைப்புப் பேரவை அந் நாட்டின் சட்டவாக்கத்தை முற்புனராய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது. (......................) |
| 38 பிரித்தானியாவில் கீழ்மன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை பிரபுக்கள் சபை காலதாமதப்படுத்த முடியும் | இங்கிலாந்துப் பாராளுமன்றம் நிருவாகத் துறையை கட்டுப்படுத்துகின்றது. (......................) |
| 39 இந்திய மாநில அரசுகள் இராஜ்ய சபையில் சமமான பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றன. | இந்திய ஜனாதிபதியை குற்றப்பிரேரணை ஒன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்க முடியும். (......................) |
| 40 சோவியற் யூனியனின் பிரிசீடியம் சுப்ரீம் சோவியற்மன்றினால் தெரிவுசெய்யப்பட்டது. | சுப்ரீம் சோவியத் மன்றம் சமமான அதிகாரங்களை உடைய இரு மன்றுக்களைக் கொண்டமைந்திருக்கின்றது. (......................) |

# அரசியல் மூலத்தத்துவங்கள் I

## பகுதி II

☆ **நான்கு வினாக்களுக்கு விட தருக.**

01) அரசறிவியல் என்றால் என்ன? அதன் பாடப்பரப்பினை ஆராய்க?
02) I) அரசிற்கும் சமூகத்திற்கும்
II) சங்கத்திற்கும்
III) அரசாங்கத்திற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
03) I) ஒருதாராண்மைவாத அரசிலும்
II) ஒருபாஸிச அரசிலும் தனிப்பட்டவரின் நிலையினை ஆராய்க.
04) I) நீதித்துறை என்றால் என்ன?
II) நீதித்துறையின் பணிகள் எவை?
III) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் எவை?
05) எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையை விகிதசம தேர்தல் முறைப்பாடு பின்வரும் தலைப்புக்களில் ஒப்பிடுக?
I) பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறை
II) வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும்
III) இரண்டினதும் நன்மை தீமைகள்
06) I) அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகுதியும் தெரிவும்
II) அமெரிக்க ஜனாதிபதிக்கும் சட்டத்துறைக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்புகள்
III) செனற்றின் பங்கு
07) எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
I) ஜனாதிபதி ஆட்சி
II) பொதுசன அபிப்பிராயம்
III) வலுவேறாக்கம்
IV) பிரித்தானிய முடிவு
V) அமுக்கக்குழு

# அரசியல் மூலத்தத்துவங்கள் II

## பகுதி I

☆ **1 முதல் 5 வரையிலான வினாக்களிற்குப் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக?**

01) பின்வருவனவற்றில் எது பிரித்தானிய ஆட்சிக்காலப் பகுதியில் உருவாக்கப்பட்டது.
(1) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஒரு இறக்குமதி, ஏற்றுமதி பொருளாதாரம்
(2) இராஜகாரிய முறை
(3) கச்சேரி முறை
(4) ஒரு சட்ட மன்ற முறை (......................)
02) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள்
(1) தேசாதிபதியின் தான்தோன்றித்தனமான ஆட்சியைப் பலவீனப்படுத்தியது.
(2) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை முன்மொழிந்தது.
(3) பாராளுமன்ற நிறுவனங்களின் ஆரம்பத்தைக் குறித்து நின்றது.
(4) ஒரு சுதந்திரமான நீதித்துறையை எதிர்பார்த்தது. (......................)
03) 1833 இல் சட்ட நிருபணசபை உருவாக்கப்பட்டது.
(1) மொத்தமாக 15அங்கத்தவர்களைக் கொண்டதாக
(2) 06 உத்தியோகப்பற்றற்ற 09 உத்தியோக அங்கத்தவர்களைக் கொண்டதாக
(3) அரசாங்கத்தின் இராணுவச் செலவுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது.
(4) தேசாதிபதி பதவி வழி சபையின் அக்கிராசனராக விளங்கினார். (......................)
04) இலங்கைத் தேசிய காங்கிரஸ்
(1) 1919 இல் உருவாக்கப்பட்டது.
(2) அதன் இறுதி இலக்காக உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் என்பதை ஏற்றுக்கொண்டது.
(3) 1921 இல் அறிமுகம் செய்யப்பட்ட யாப்பு சீர்திருத்தங்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது.
(4) பூரண சுதந்திரத்துக்காக பிரசாரம் செய்தது. (......................)
05) 1930களில் இடதுசாரி இயக்கம்
(1) நாட்டிற்குப் பூரண சுதந்திரத்தை கோரியது.
(2) அரசாங்கசபையில் பாராளுமன்ற எதிர்க்கட்சி என்ற பங்கினை ஆற்றியது.
(3) இலங்கைத் தேசிய காங்கிரசுடன் இணைந்திருந்தது.
(4) உள்ளார்ந்த பிளவுகளால் பலவீனமடைந்தது. (......................)

☆ **6 - 8 வரையிலான வினாக்களிற்குச் சரியான சேர்மானமானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.**

06) டொனமூர் அரசியல் திட்டம்
(A) சர்வசன வாக்குரிமையை முன்மொழிந்தது.
(B) அரசாங்கசபையிடமிருந்து நிர்வாக சட்ட ஆக்க கடமைகளை எதிர்பார்த்தது.
(C) வகுப்புவாத அரசியலை தளர்ச்சியடைய விரும்பியது.
(D) ஓர் இரண்டாவது சபை உருவாக்க வேண்டுமென்றே பிரேரணையை ஏற்றுக் கொண்டது.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB
07) டொனமூர் யாப்பில் சோதிபதி
(A) அரசாங்க சபையினைக் கலைக்கும் அதிகாரம் கொண்டிருந்தார்
(B) அரசியலிலிருந்து விலகி இருக்க எதிர்பார்க்கப்பட்டது.
(C) அமைச்சர்கள் சபையில் இலங்கை அங்கத்தவர்களை நியமித்தார்.
(D) 1931 - 36 க்குமிடையில் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் மிகவும நெருக்கமாகச் செயற்பட்டார்.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB
08) டொனமூர் யாப்பில் நிர்வாகக் குழு
(A) சிறுபான்மைத் தலைவர்களிற்கு நிர்வாக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள இடமளித்தது.
(B) அரசாங்கம் திறமையற்றதும் மெதுவாகவும் செயற்படச் செய்தது.
(C) அரசாங்கசபையின் சாதாரண அங்கத்தவர்கள் முன்னணிப்பங்காற்றிட வாய்ப்பளித்தது.
(D) யுத்தத்தின் போது அரசாங்கத்தின் மிகவும் பலம் வாய்ந்த ஸ்தாபனமாகியது.
(1) ABC (2) BCD (3) CDA (4) DAB

☆ **9 - 11 வரையிலான கேள்விகளிற்கு பொருத்தமற்ற கூற்றினை அடையாளம் காண்க.**

9) சோல்பரியாப்பு
(A) சமமற்ற ஈரங்க மன்ற வாதத்தை பின்பற்றியது.
(B) சட்டத்தினை நீதிப்புனராய்வு செய்ய அனுமதித்தது.
(C) பாராளுமன்ற இறைமை என்ற தத்துவத்தினை நிறைவுவேற்றியது.
(D) ஒரு சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழுவினை உருவாக்கியது.
10) சோல்பரியாப்பின் 29 ஆவது சரத்து
(1) பாரபட்சமான சட்டங்களைத் தடுத்து
(2) எல்லா மதங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டுமென விதித்தது.
(3) ஒரு சிறுபான்மையோர் பாதுகாப்பு எனக்கொள்ளப்பட்டது.
(4) சிறுபான்மையினரை விசேடமாக நடத்துவதை அனுமதித்தது.
11) சோல்பரியாப்பின் கீழ் செனற்
(1) முதலாவது சபையினைக் கண்காணிக்கவென உருவாக்கப்பட்டது.
(2) முதலாவது சபையினைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் கண்டிக்கப்பட்டது.
(3) தெரிவுசெய்யப்படாத சட்டசபை அங்கத்தவர் ஒருவரை நீதி அமைச்சராக நியமிக்க உதவியது.
(4) இலங்கையின் ஓர் இறைமை மிக்க குடியரசாக்கியது.

(அரசியல் மூலத்தத்துவங்கள்- II தொடர்ச்சி 05.05.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org